6.2

கடவுள் ஒருவர் உண்டா?

அல்லது

கமலா விமலா சம்வாதம்.

ஸ்ரீ சுவாமி சிவானந்த ஸரஸ்வதி யவர்களின் முன்னுரையுடன்.

இயற்றியவர்

ஞானசௌந்தரி அம்மையார்.

பெற்றது

முன்னுரைகளுடன்
பக்கம் 78

1952

விலை ரூ. 0—12—0



கடவுள் ஒருவர் உண்டா?

அல்லது

கமலா விமலா சம்வாதம்.

இரண்டாம் பதிப்பு.

இஃது

ஸ்வாமி அத்வயானந்த ஸரஸ்வதி யவர்களின்

சீடராகிய

அருட்செல்வி. ஞானசௌந்தரி அம்மையாரால்

இயற்றப் பெற்றது.

*

கிடைக்குமிடம்:

சிவானந்த சாதன நிலையம்,

திரு ஈங்கோய் மலை.

முசிறி தாலுக்கா, திருச்சிராப்பள்ளி ஜில்லா.

௵ 1952.

விலை. ரூ. 0—12—0

1952. 12 அணா

6-2

ஓம்



நூலாசிரியரின் பரம குருவாகிய

ஸ்ரீ சுவாமி சிவானந்த ஸரஸ்வதி மஹாராஜ்

6-2

FOREWORD

"For those who believe, no explanation is necessary;
for those who do not, no explanation is possible."

This proverb is belied by this marvellous work from the pen of the blessed child of the Goddess of Wisdom, Sri. Jnanasoundari. True to her name, Sri Jnanasoundari wears the crest-jewel of Jnana which imparts divine beauty to her very soul and enables her to shed divine light on the path of many a seeker. She is the Triveni the confluence of the three rivers of secular knowledge gained through English education, scriptural knowledge gained through years of close study under the Jnana-Sagara (Ocean of knowledge) Sri Swami Adwayanandaji Maharaj, and spiritual inner experience gained through diligent Yoga-Abhyasa under the guidance of this Anubhava-Jnani. Therefore, her words have the power to convince and convert even a rank atheist, and to subdue the proud intellect which vainly struggles to rebel against its own source-power.

Even the doubter would be amazed if he were to turn his attention to that principle within, which doubts! What is the "thing" called the mind or the intellect whose vast potentialities have baffled the bravest of scientists, which eludes the most powerful microscope but suffers tortuous agony at the slightest injury to the body? What is its connection with the body — or, how does this invisible tyrant rule the body, poisoning the blood and tissues of the body with the venom of lust, anger and greed? When even the nature of the mind eludes our understanding, how can we hope to understand That Supreme Principle with whose borrowed light the mind functions and the intellect argues?

The dry intellect has little hope of ever entering the Realm of Blazing Knowledge. But, there is one saving feature: if a little spark of Faith alights upon this huge hay - stack of - intellectual knowledge, it will be instantly reduced to ashes – and out of the ashes will rise Supreme Faith, Unquestioning Faith, which is only another name for the Light of True Knowledge.

Until this Faith arises in man, he will go on arguing– does God exist or not: the faithful will affirm His existence and rise to be one with HIM; and the faithless will deny existence to the Very God Who sees through their eyes, hears through their ears, thinks through their mind and lives in their heart, till, blinded by ignorance, they knock their heads repeatedly against the wall of worldliness and, severely bruised, cry from their death-bed "Oh, God, save me," or till their great good fortune and God's Grace places in their hands precious divine books like this treasure - house of wisdom from the pen of their real friend and well-wisher, Sri Jnanasoundari.

May God bless Sri Jnanasoundari with health and long life to serve humanity and awaken men and women to the Reality of the Supreme Being!

Ananda Kutir,
Rishikesh,
1st November, 1952

SWAMI SIVANANDA

ஓம்

நூலாசிரியரின் பரம குருவாகிய ரிஷிகேசம், பூமண்டல சற்குரு ஸ்ரீ சுவாமி சிவானந்த ஸரஸ்வதி மஹாராஜ் அவர்களின் முன்னுரை.

"நம்பிக்கை யுள்ளார்க்கு விளக்குதல் தேவையில்லை.
நம்பிக்கை கொள்ளார்க்கு விளக்குதல் இயலாது."

இப் பழ மொழியை ஞான சொரூபியாம் ஸரஸ்வதி தேவியின் அருட்குழவியே என்னத் திகழும் திரு. ஞானசௌந்தரி அம்மையாரால் வரையப் பெற்ற மதிப்பிடற்கரிய இந் நூல் பொய்ப்பித்து விட்டது. திரு. ஞானசௌந்தரி தம் பெயருக்கேற்ப உண்மையில் ஞானமாகிய சிரோரத்தினத்தை அணிகலனுகப் பூண்டு தன் ஜீவாத்மாவைப் பிரம்மமாக அழகுற அலங்கரித்துக் கொண்டது மன்றி, உண்மைப் பொருளைத் தேடும் அநேகருக்கு வழிகாட்டும் தெய்வ விளக்காகவும் ஒளிரு கின்ருர். அவர், ஆங்கிலக் கல்வியாலுண்டான உலக அறிவும், ஞான சாகரம் (அறிவுக் கடல்) ஆகிய திரு. சுவாமி அத்வயானந்தஜீ மஹாராஜ் அவர்களிடம் பல்லாண்டுகளாகப் பயின்ற மறைநூலறிவும், அனுபவ ஞானியாகிய அன்னுரிடம் பக்தி சிரத்தையுடன் பயின்ற தியானயோகப் பயிற்சியால் அடைந்துள்ள ஆத்மானு பவமும் ஆகிய மூன்று நதிகளும் ஒன்ருகக்கூடிய திரிவேணியே யாவர். ஆதலால் அவர் சொற்கள் எத் தகைய கடும் நாத்திகரையும் நம்பும்படி செய்து மாற்றி விடும் ஆற்றலுடையனவாகவும், தன்னை ஊக்குவிக்கும் மூலசக்தியையே இல்லையென எதிர்த்து மறுக்கும்

அகந்தை படைத்த வறட்டு அறிவைப் பணியவைக்க வலிமை யுள்ளனவாகவும் இருக்கின்றன.

சந்தேப்படுபவன்கூட தன்னுள்ளிருந்து சந்தேகிக்கும் தத்துவம் எது என்று கவனிக்கப் புகுவானே யாகில் அடங்கா வியப்பினை யடைவன். அணுக்களை அண்டங்களாகக் காட்டும் ஆற்றல் வாய்ந்த அணுதர்சனி யாலும் கண்டறியவியலாததும், மிகப் பெரிய விஞ்ஞானிகளின் விவேகத்திற்கும் எட்டாததும், ஆனால், சரீரத்தின் எப்பாகத்திலேனும் எள்ளளவு புண் ஏற்பட்டாலும் மிகவும் துடி துடிப்பது மான மனம் அல்லது புத்தியென்னும் அப்பொருள் யாது? அதற்கும் சரீரத்திற்கும் என்ன சம்பந்தம்? காமம், குரோதம், லோபம் என்னும் விஷங்களை நரம்புகளிலும், இரத்தத்திலும் பரவச்செய்து அது எங்ஙனம் கொடுங்கோல் ஆட்சி புரிகின்றது? என்பவற்றைத் தெரிந்துகொள்ள முடிகின்றதா? மனத்தின் தத்துவமே நமக்குப் புலப்படாதபொழுது, எதன் சக்தியால் மனம் எண்ணங்களை எண்ணுகின்றதோ, எதனிடமிருந்து இரவலாகப் பெற்ற ஒளியினால் புத்தி விசாரம் செய்கின்றதோ அந்தப் பரம்பொருளின் நிலையை நாம் எங்ஙனம் அறியவியலும்?

அறிவொளிப் பிழம்பாய் விளங்கும் பரம் பொருள் மானிடரின் வறட்டு அறிவிற்கு அப்பாற்பட்டது. ஆயினும், அப்பரம்பொருளை அறிந்துகொள்ள

ஒரு வழியுமுண்டு. மானிடரின் வறட்டறிவாகிய பெரிய வைக்கோற் போரில் நம்பிக்கை யென்னும் சிறியதோர் தீப்பொறி படுமாயின் உடனே அது எரிந்து நீருகிவிட அச்சாம்பலி லிருந்து ஓர் உன்னதமான நம்பிக்கை எழும். உண்மை ஞான ஒளியின் மற்றெரு வடிவம் இந்த ஐயமற்ற நம்பிக்கை.

இந்த உறுதியான நம்பிக்கை ஏற்படும் வரை மனிதன் "கடவுள் உண்டா இல்லையா?" என்று வாதாடிக்கொண்டேதா னிருப்பான். நம்பிக்கை யுடையவன் கடவுள் உண்டென உறுதியாகக் கூறி உயர்ந்து உயர்ந்து அவருடன் ஒன்ருகக் கலப்பான். ஆனல் நம்பிக்கை யில்லாதவர்கள் எந்தக் கடவுளின் சக்தியால் கண்கள் பார்க்கின்றனவோ, காதுகள் கேட்கின்றன வோ, மனது சிந்திக்கின்றதோ அவர்களின் இருதயத்தில் வாசஞ் செய்யும் அந்தக் கடவுளையே யில்லை யென்பார்கள். அஞ்ஞானத்தினல் குருடாயிருக்கும் வரையும் உலக ஆசை யென்னும் சுவற்றில் பல முறை மோதிக் கொண்டு பலத்த காயம் ஏற்பட்டு இறக்குந் தறுவாயில் "கடவுளே என்னைக் காப்பாற்று" என்று கதறுவார்கள். அல்லது அவர்களின் பெரும் அதிர்ஷ்ட வசத்தினுலும், கடவுள் கிருபையாலும், அவர்களது நலனையே பெரிதாகக் கருதும் அருளாளராகிய திரு. ஞான சௌந்தரி அம்மையாரால் எழுதப்பெற்ற ஞானப் பொக்கிஷமாகிய இந்தப் புத்தகம் போன்ற தெய்வ மணங்கமழும் புத்தகங்கள் அவர்கள் கையில் கிடைக்

கும் வரையுமே இவ்வாறு கடவுளை அறியாது துன்புறு வார்கள். இப்புத்தகத்தை நன்கு படித்தறிந்தோர்கள் இறைவனை யடைவர் என்ப துறுதி.

மனித சமூகத்திற்குத் தொண்டாற்றுவதற்காக வும், பரம் பொருளின் சாக்ஷாத்கார மடையும்படி ஆட வரையும் மகளிரையும் விழிப்படையச் செய்வதற்கா கவும் திரு. ஞானசௌந்தரி யவர்களை உடல் நலனுட னும் நீண்ட ஆயுளுடனும் வாழ ஆண்டவர் அருள் புரிவாராக!

ஆனந்தகுடீர்,
ரிஷீகேசம்,
1—11—1952.

ஸ்வாமி சிவானந்தா.

ஓம்

இந் நூலாசிரியரின் தந்தையராகிய விருதை, திரு. வே. சங்கரலிங்க நாடாரவர்களது குடும்பம் முழு வதும் இறைவன் அருளும், எனது ஸ்ரீ சற்குருநாதரது அருளும் பெற்று எல்லா நலங்களுடனும் சிறப்புற விளங்குவதாக!

இங்ஙனம்,
ஸ்வாமி அத்வயானந்தா.

முகவுரை.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்னும் பழமொழிக்கேற்ப இந் நூலாசிரியராகிய அருட்செல்வி ஞானசௌந்தரி அம்மையார் இளமையிலேயே மிகுந்த கடவுள் பக்தியும், சிறந்த கல்வியறிவும், உயர்ந்த குண நலன்களும், அடக்கமும், சொல்லாற்றலும், எழுத்து வன்மையும் மிக்கவராகத் திகழுகின்றார். இவரைப் பெறுவதற்கு இவர் தாய் தந்தையர் என்ன தவம் இழைத்தனரோ! தமிழ் நாடு செய்துள்ள தவத்தினாலே தான் இவர் தோன்றியுள்ளார் போலும். இவரால் இயற்றப் பெற்றுள்ள "யோக வாசிட்ட ஞானப் பெண்மணிகள்" என்னும் நூலைப் படிப்போருக்கு இவரது ஆத்மீக ஞானமும், புலமைத் திறனும் தெற்றென விளங்கும். அந்த நூலைப் படிப்பதனால், நம் தமிழ் நாட்டுத் தையலர்கள் ஓர் புத்துணர்வு பெறுவதோடு, எல்லோருக்கும் ஞானம் எளிதில் உண்டாகும்.

"கடவுள் ஒருவர் உண்டா அல்லது கமலா விமலா சம்வாதம்" என்னும் இந் நூல் இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. பகுத்தறிவின்றித் தற்காலத்தில் கடவுளைப் பற்றித் தாறுமாறாகக் கேள்விகள் கேட்டு அறிவினைக் கலக்கிக் கொண்டுள்ளவர்கட்கு இது ஒரு சிறந்த ஔடதம் போன்றதாகும். இதனைக் கற்போர் கடவுள் சம்பந்தமான பலவித ஐயங்களையும் அகற்றிக் கொள்வர் என்பது உறுதி. இதனைப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் பாடமாக வைப்பார்களாயின் இளைஞர்களின் உள்ளத்தைப் பண்படுத்தி அவர்களை நன்னெறியில் உய்த்து நாட்டை நலனுறச் செய்யும்.

இக்கால மாணவருக் கேற்ற முறையில் இந் நூலை இயற்றியுள்ள அருட்செல்வி. ஞானசௌந்தரி அம்மையார், ஸ்ரீ சரஸ்வதி தேவியின் திருவருளை மென்மேலும் பெற்று, உடல் நலனுறப் பல்லாண்டு வாழ்ந்து, ஞான பானுவாய் விளங்கிப் பல நூல்களும் விரிவுரைகளும் இயற்றி, ஆக்கை மருத்துவமும், ஆன்ம மருத்துவமும் செய்து நாட்டை நலனுறச் செய்வாராக!

அத்வயானந்தம்.



ஓம்

கடவுள் ஒருவர் உண்டா?

அல்லது

கமலா விமலா சம்வாதம்.

கமலா:- கலாசாலையில் பயின்று கொண்டிருக்கும் நவ நாகரீக உடையும் நடையும் உடைய ஒரு மங்கை.

விமலா:- கலாசாலைப் படிப்பு முடிந்து பெரியோரை யடுத்து வேதாந்த சாஸ்திரங்கள் பயின்று நெற்றியில் வெண்ணீறு குங்குமம் துலங்க நித்தியம் இறை வழிபாடு இயற்றிவரும் ஒரு மடந்தை.

முதற் சந்திப்பு.

கமலாவிற்கு விமலாவின் போக்கு பிடிக்க வில்லை. விமலாவைச் சில கேள்விகள் கேட்டு மடக்கித் தன்போன்ற கொள்கை யுடையவளாகச் செய்ய வேண்டு மென்ற எண்ணத்துடன் ஒரு விடுமுறை நாளில் விமலாவின் வீட்டுக்குச் சென்று தனித்துப் பேசிக்கொண் டிருக்கும் போது விமலாவைக் கேட்க ஆரம்பிக்கிருள்.

கமலா;- விமலா அக்கா! எனக்குச் சில சந்தேகங்கள் உன்னிடம் கேட்க வேண்டு மென்ற எண்ண முள்ளது. கேட்கலாமா?

விமலா:- ஆஹா! தாராளமாய்க் கேட்கலாமே. அதற்கென்ன தடை?

கமலா:-

கடவுள் கடவுள் என்றெ தற்கும்
கதறு கின்ற மனிதர்காள்!
கடவு ளென்ற நாம தேயம்
கழறி டாத நாளிலும்
உடைமை யாவும் பொதுமை யாக
உலகு நன்று வாழ்ந்ததாம்
கடையர் செல்வர் என்ற தொல்லே
கடவுள் பேரி ழைத்ததே.

என்ற பாரதிதாசன் அவர்களது கருத்தை நான் வரவேற்கிறேன்.

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த ஜோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களுங் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே.

என்றபடி எண்ணிறந்த நாட்களே நாம் ஏன் வீணுகக் கழிக்க வேண்டும்? கடவுள் என்ற ஒருவர் உண்மை யாக உள்ளார் என்ருல் இப்பொழுதே அவரை உங்களால் எனக்குக் காட்ட முடியுமா?

விமலா:- கமலா! உன்னே ஒரு பிரம்பால் அடிக்கிறேன் என்று வைத்துக்கொள். உனக்குள்ள வலியை எனக்குக் காட்ட முடியுமா?

கமலா:- அதெப்படி யக்கா முடியும்? நீங்கள்

கேட்கும் கேள்வி, மூடத்தனமாக வன்றோ இருக்கின்றது. "வலியை" அவ்வலிதனை யுடையவரால் உணர முடியுமே யன்றி காண முடியாதே!

விமலா:- கடவுளும் அப்படியேதான் உள்ளார். இறைவனையும் இடைவிடாத பக்தியின் மூலமும் ஆழ்ந்த தியானத்தின் மூலமும் உணரலாமே யன்றி நேரிற் காண இயலாது.

கமலா:- காணமுடியாத கடவுளை அடைவது எப்படி? அப்படியே அவரை யடைந்தாலும் புலன் களுக்குப் புலப்படாத அவரால் எனக்கு என்ன லாபம்? நான் பல வகையான சந்தோஷ சாகரங் களிலே இப்போது அமிழ்ந்திருக்கிறேன். இந்நிலையிலே உதவாக்கரை விஷயங்களைப் பற்றிப் பேசி எதற்காக எனது இன்ப நிலையைக் கலைக்கவேண்டும்? கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது எல்லாம் உனது கனவு தான். என்னால் இவைகளை யெல்லாம் நம்ப முடிய வில்லை. நீ அறியாமையில் ஆழ்ந் திருக்கின்றாய். அக்கா! நான் ஒரு விஞ்ஞானி. நான் சோதனைச் சாலையில் நிரூபிக்கப்படுபவைகளையே நம்புவேன்.

விமலா:- கமலா! நன்று சொன்னாய். சர்வ வல்லமையுள்ள கடவுளின் அளவற்ற பிரதாபங்களை நீ அளவிட்டுக் கூற வேண்டுகின்றாய். விஞ்ஞான ரசாயன அறிவு அனைத்திற்கும் கடவுள் தான் மூலா தாரம். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. நீங்கள் Atoms (அணுக்கள்) என்றும், Molecules (பரமா ணுக்கள்) என்றும், Electrons (மின்னணுக்கள்)

என்றும் கூறுபவை அனைத்தும் கடவுள் இல்லையானால் இல்லைதான். அக்கடவுள் இல்லாது நெருப்பு எரியாது. சூரியன் பிரகாசிக்க மாட்டான். காற்று அசையாது. அவரில்லாது உன்னால் பேச முடியாது. உன்னால் கேட்க முடியாது. சிந்திக்க முடியாது. ஆகர்ஷண சக்தியைப் பற்றியும் இதர விதிகளைப் பற்றியும் விஞ்ஞானத்தில் நீ படிக்கும் அனைத்தையும் உண்டாக்கியவர் அவரே. ஆகையால் அவரை அன்போடும் பக்தியோடும் வணங்கு. அவ்வாறு வணங்குவாயானால் நீ விஞ்ஞானங்களாலாகிய விஞ்ஞானமாகிய பிரம்ம வித்தையை அவருடைய அருளால் அறிந்து மோக்ஷமடைவாய்.

கமலா:- சரிதான்! விஞ்ஞானங்களாலாகிய விஞ்ஞானம் என்ற பிரம்ம வித்தை ஒன்று இருக்கிறதோ? நானும் கல்விச் சாலைகளில் விஞ்ஞானம் கற்றுத்தான் இருக்கின்றேன். ஆனால் நீ கூறும் இவ்விஞ்ஞானத்தை எங்கும் கேட்டதில்லை. இத்தனை நாளும் ஏதோ கடவுள் என்று கனவு கண்டுகொண்டிருப்பவள் என்றல்லவோ உன்னை நினைத்தேன். இப்போது நீ சொல்வதைப் பார்த்தால் பல அண்டப் புளுகுகளை யெல்லாம் கூறுகின்றாயே.

விமலா:- கமலா! அறியாது தவறான முறைகளைக் கூறாதே. ஆழ்ந்து யோசித்துச் சரியானபடி நட. தங்கம் இருக்கின்றது; அதிலிருந்து வளையல் என்றும், மோதிரம் என்றும், சங்கிலி என்றும் பல்வேறான பொருள்கள் தோன்றுகின்றன. ஒரே

தங்கத்தையே பல்வேறு நாமத்தால் அழைக்கின்றோம். தங்கம்தான் இவைகளுக் கெல்லாம் மூலாதாரம். அவ்வாறே பௌதிகம், ரசாயனம் அனைத்திற்கும் மூலாதாரம் கடவுளே. நீ சரிவர விஞ்ஞானத்தை அறிய விரும்புவாயாயின் பிரம்ம வித்தையை அறிந்தே ஆகவேண்டும். களிமண்ணால் செய்யப்பட்ட பொருள் களின் தன்மைகளை அறிய களிமண்ணைப் பற்றிய அறிவு இருந்தால்தானே முடியும். அது போன்றே விஞ்ஞானத்தைப் பற்றி அறிய கடவுளைப் பற்றிய அறிவும் அவசியம். இந்த அறிவு சாதாரண கல்விச் சாலைகளில் பெறக்கூடிய அறிவு அன்று; உண்மை உணர்ந்த உத்தம குருவால் அடையக் கூடிய அறிவு. சுழன்று சுழன்று ஆடும் மனதைக் கட்டுப்படுத்தி சிந்தையை அடக்கினால்தான் ஆண்டவனைப் பற்றிய அறிவை அடைய முடியும்.

கமலா:- சரிதான்! ஆண்டவனென்று ஒருவன் இருக்கின்றான் என்று நம்பினால் தானே அவனுடைய அறிவைப் பெறுதற்கு முயலமுடியும்! எனக்குத்தான் கடவுள் என்று ஒருவர் இருக்கின்றார் என்ற நம்பிக்கையே இல்லையே. கண்ணால் காண முடியாத கடவுளை உண்டென்று நம்புவ தெப்படி ?

விமலா:- ஒரு பொருள் உண்டென்று நம்புவ தற்குப் பிரத்தியட்சப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என மூன்று அளவை கள் உள்ளன. மலைமீது தீ எரிந்துகொண்டிருப்பதை நேரில் காணுவது பிரத்தியட்சப் பிரமாணம். தீயி

லிருந்து கிளம்பும் புகையை மட்டும் பார்த்து மலையில் தீ இருக்கிற தென்று தீர்மானிப்பது அனுமானப் பிரமாணம். ஆகமப் பிரமாணம் என்பது நூலறிவு. முதலில் ஆகமப் பிரமாணத்தினுல் கடவுள் ஒருவர் உண்டென்று அறிந்து, பின் அனுமானப் பிரமாணத் தினுல் அக்கடவுள் இருந்தே தீரவேண்டு மென்று தீர்மானித்துப் பின் தியானம் முதலிய சாதனைகளால் அக்கடவுளை அனுபவமாயுணரவேண்டும். படைப்புப் பொருள்கள் அனைத்தையுங் கண்டும் அவற்றுள் அடங்கிக் கிடக்கும் அற்புதங்களைக் கண்டும் அவற்றை உண்டாக்க ஒரு தலைவன் உளன் என்று உணர வேண்டும். பாலினுள் நெய் இருப்பது பாலைப் பார்த்த போது காண முடிகிறதா? இல்லையே! அதனுல் பாலில் நெய் இல்லையென்று கூறுவார் யாரேனுமுண்டோ? நமது கண்ணுக்குக் காண முடியாததும், பாலில் எங்கும் வியாபித்திருப்பதுமாகிய நெய்யைக்காண, பாலைக் காய்ச்சித் தயிராக்கி தயிரில் மத்தினை ஊன்றிக் கடைதல் வேண்டும். கடைந்தால் அதிலிருந்து வெண்ணையும் நெய்யும் பெறலாம். இரத்தினக் கற் களில் ஒளி யிருக்கின்றது. அவ்வொளியை வெளிப் படுத்த, கயிற்றை வாங்கிக் கடைய வேண்டும். விறகில் தீ இருக்கின்றது. அத் தீயை வெளிப்படுத்த, அரணிக் கட்டையை முறுக வாங்கிக் கடைய வேண்டும். அதுபோல கடவுள் இவ்வுலகத்தில் காண முடியாதபடி மறைந் திருக்கிறுர். அவரைக் காண்ப தற்குப் பேரன்பாகிய மத்தினை ஊன்றி அறிவாகிய கயிற்றினுல் முறுக வாங்கிக் கடைந்தால் முடியும். இக் கருத்தினையே நமது அப்பராகிய திருநாவுக்கரசு சுவாமிகள்:-

"விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

என்னும் தேவாரத்தால் நன்கு விளக்கியுள்ளார்.

வாயுவை நமக்குக் கண்களால் காண முடிகின்றதா? மின்சாரத்தைக் கண்ணுல் காண முடிகிறதா? நமது கண்ணுக்குக் காண முடியாததால் அவை யில்லையென்று நாம் சொல்ல முடியுமா? அவை செய்யும் வேலைகளைக் கொண்டு அவை உண்டென்று எப்படி நம்புகின்ருேமோ, அப்படியே கடவுளின் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய தொழில்களைக் கண்டு அவன் உண்டென்பதை அறிந்து கொள்ளவேண்டும். இன்னமுங்கேள், நீ பகற்காலத்திலே நக்ஷத்திரங்களைப் பார்க்க முடியாவிட்டாலும், அவைகள் இருக்கத்தானே செய்கின்றன. அவைகளில்லாம லில்லையே. மேகம் சூரியனை மறைக்கும் போது உன் புறக் கண்களால் சூரியனைக் காணமுடியவில்லையே! அப்படியாளுல் சூரியனே இல்லையென்று பொருளா? அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கும் நீ உனது புறக்கண்களால் அவரைப் பார்க்க முடியாவிட்டாலும் அவர் உண்மையாக விருக்கின்ருர். தியானத்தைப் பழகுவதன் மூலமாக உனது தெய்வீகக் கண்களால் அவரைப் பார்க்க முடியும்.

கமலா:- ஏன் விமலா அக்கா! இறைவன் என்று ஒருவன் இருந்துதான் ஐந்தொழில்களும்

நடை பெற வேண்டுமா? இயற்கைதான் எல்லாக் காரியங்களையும் செய்கின்றது. கடவுள் இருக்கிறார் என்று நாம் ஏன் நம்பவேண்டும்? கடவுள் இல்லாது இயற்கையே உலகை நடத்த முடியும் அல்லவா?

விமலா:- இயற்கை என்பது தன்னால் தனியே இயங்க வல்லது அல்ல. இறைவனின் பணிப்பெண்ணே இயற்கை. கடவுள் பிரகிருதி அல்லது இயற்கையை இயங்கச் செய்கின்றார். கடவுள் இவ் வண்ணம் இயற்கையை இயங்கச் செய்ய இயற்கை தனது வேலையை நடத்துகின்றது. எவ்வாறு உஷ்ணத்தை நெருப்பிலிருந்து பிரிக்க முடியாதோ அவ்வாறே இயற்கையையும் இறைவனிடமிருந்து பிரிக்க முடியாது. எரியும் சக்தியானது எவ்வாறு நெருப்பி னின்றும் பெறப்படுகின்றதோ அவ்வாறே இயற்கை யும் இறைவனிடமிருந்து பெறப்படுகின்றது. இயற்கை காரண காரியங்களோடு இயைந்தது. கடவுள் காரண காரியங்களுக்கு மேற்பட்டவர். மரத்தினின்று வித்தும் வித்தினின்று மரமும் உண்டாவது இயற்கை. இவற்றுள் முதலிலுண்டானது வித்தா? மரமா? வித்தினையோ மரத்தையோ ஆதியில் உண்டு பண்ண ஆதிமூலப் பொருள் ஒன்று இருந்துதானே தீர வேண் டும்? படைப்புப் பொருள்கள் அனைத்தும் தோன்று வதற்குக் காரணமாக நின்று அவை இயற்கையாய் நடப்பன போலக் காட்டுவதே ஆண்டவனின் அருட் செயலாகும்.

கமலா:- நான் இதுகாறும் கடவுள் என்று ஒருவர் இருப்பதாகவே எண்ணவில்லை. வேதாந்திக

ளுடையவும் பக்தர்களுடையவும் கற்பனைப் பொருளே கடவுள் என்று இருந்தேன். கடவுள் ஒருவர் வேண்டுமானால் இருந்துவிட்டுப்போகட்டும். அவரைப் பற்றி நமக்குக் கவலை ஏன்? எவ்வாறு வெற்றிலையும், பாக்கும், சுண்ணும்பும் சேர்ந்து சிவப்பு வர்ணம் உண்டாகின்றதோ அவ்வாறே ஐந்து மூலப்பொருள் களின் சேர்க்கையால் இவ்வுடம்பு ஆனது. "Eat, drink and be merry" என ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் உளது. அதாவது சாப்பிடு, குடி, சந்தோஷமாயிரு என்பதாகும். அந்த வாக்கியம்தான் என் உள்ளத்தைக் கவருகின்றது. இந்த உடலைக் கொண்டும் இந்திரியங்களைக் கொண்டும் நம்மால் எவ்வளவு இன்பம் அடைய முடிகிறதோ அவ்வளவு இன்பத்தையும் அடைய முற்படவேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்காக நம் இந்திரியங்களை ஒடுக்கி உபவாசம் என்றும் மௌனம் என்றும் தியானம் என்றும் இருப்பது அறிவீனம் அவை ஒரு மூடனின் செயல்களே யாகும்.

விமலா:- கமலா! உலக இன்பங்கள் நிலையற்றது. மிக அதிக வாழ்நாளையுடைய வாழ்க்கையும் குறுகிய அளவை யுடையது. எந்த மங்கையும் தனது காதலனாலும் குழந்தையாலும் பொருளாலும் பூரண இன்பத்தை அடையமாட்டாள். காலம் என்னும் சக்கரம் கடிது சுழலச் சுழல, ஆண்டுகள் பல மாண்டு மடிய மடிய நம் அந்திய காலம் நெருங்கிக் கொண்டே வருகிறது. நீ இப்போது அறியாமையிலே ஆழ்ந்து இருக்கின்றாய். உலக விஷயங்களிலே மூழ்கி இருக்

கின்றாய். ஆதலால் தெய்வீக தத்துவங்களைப்பற்றி அறியாது பேசுகிறாய். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்த லரிது" என்றபடி பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றுள்ளோம் நாம். அப்பர் சுவாமிகள் "குனித்த புருவமும்" என்று ஆரம்பிக்கும் குறுந் தொகையில் "இனித்தமுடன் எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே" என் று சொல்லி யிருக்கின்றார். ஆகையால் ஒப்பற்ற நித்தியானந்தப் பொருளை அடைய வேண்டியது அவசியம் என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது. முருகரின் அம்சமானவர் என்று யாவராலும் போற்றப் பட்டவரும் திருமுறைகள் பன்னிரண்டில் முதலிடம் பெற்றவருமாகிய திருஞான சம்பந்தர் தோடுடைய செவியன் என்று பாடிய சீர்காழிப் பதிகத்தில் 8வது பாட்டில் "துயர இலங்கும் உலகில்"என் று பாடியிருக் கின்றார். இந்தப் பதிகத்தைப் பாடும்போது ஞான சம்பந்தர் ஒரு சிறு குழந்தை. வயது மூன்றேதான். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் துர்க் குணம் குழந்தைகளிடம் கிடையாது. குழந்தைகள் தெய்வீக சொரூபிகள் என்று அவர்களின் முகத்தி லிருந்து பிரதிபலிக்கின்றது. அத்தகைய மூன்று வயதுக் குழந்தை துன்பத்தைப் பற்றிப் பாடுகின்றது. புத்த பகவான் நாடு துறந்து காடு சென்ற காரணம் என்ன? துன்பமே யன்றோ? உலக விஷயங்கள் மிகுந்த இன்பத்தைத் தரும் என்று கூறுகின்றாய். ஆனால் உண்மை அதுவல்ல. "பிறந்தோர் உறுவது பெருகிய

துன்பம், பிறவார் உறுவது பெரும் பேரின்பம்'' என்று மணிமேகலை கூறுகின்றது. கபிலர் எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகின்றார் பார்:—

“உலகத் திரே உலகத் திரே
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை
ஐம்பது இரவில் அகலும் துயிலினால்
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும்
ஆக்கை இளமையால் ஐம்மூன்று நீங்கும்
பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்று
இடிகரை ஒத்தது இளமை இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள்.''

இதில் உலக வாழ்க்கை எவ்வளவு அழியுந் தன்மையது என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. குமர குருபரருடைய:—

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. என்ற

செய்யுள் நீ கற்காத தன்றே.

கடலென்ற புவிமீதி லலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்

உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாம லிரவும் பகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபயன் அடைந்தி லேனே
தடமென்ற மிடிகரையில் பந்தபா சங்களெனும்
தாவரப் பின்ன லிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியே னைஇவ் வண்ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்று கேளா
திருப்ப துனக்கழ காகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லை வாழ்நட ராஜனே.

என்ற நடராஜப் பதிகத்தை சற்று சிந்தனை செய்து பார்.

"தோற்ற முண்டேல் மரண முண்டு
துயரமனை வாழ்க்கை"
"இன்ப முண்டேல் துன்ப முண்டு
ஏழைமனை வாழ்க்கை"

"மண்மென மகிழ்வர் முன்னே மக்கள் தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பின்னே பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்" எனவும் "மானுட வாழ்க்கை ஒன்ருகக் கருதிடில் கண்கள் நீர் பில்கும்" எனவும் சுந்தரர் கூறும் கூற்றுக்கள் அவரது அகமலரை துயர வெம்மையானது எத்துணை வாட்டி யுள்ளது என்பதைக் காட்டியுள்ளன. இவ் வண்ணம் துயர்

நிறைந்த உலகவிவகாரத்தில் நம்மனதைச் செலுத்திச் செயல் புரிவதால் என்றும் நிலைக்கும் பேரானந்தம், சாந்தி, சுகம் ஆகியவைகள் நமக்குக் கிட்டுமா ? என்பதை நன்ருக அலசி ஆராய்ந்து பார். அப்படி ஆராய்ந்து பார்ப்பாயாளுல் இம்மாய உலகத்தில் புரியும் கர்மங்களின் பலனுக அடையும் சுகம் நிரந்தரமல்ல என்றுணர்ந்து, ஜனன மரணச் சுழலிலிருந்து விடுபடு வதற்கு, புறம்பே உள்ள பொருளினுல் உண்டாகும் சந்தோஷத்தைக் களைந்து ஆத்மாவில் இருந்து வரும் சந்தோஷத்தைப் பெரிதெனக் கருதி அதையே அனுப விக்க வேண்டும் என்பதை உணர்வாய். துன்புற்ற உயிர்களின் துன்பத்தை நீக்க இறைவன் காத்திருக் கிருர். அவரை யன்றி அதனை யகற்ற வேறெவராலும் ஆகாது. தீக்காய்பவனுக்கு உதவும் தீயினுக்கு ஒருவன் தன்னை யடைவதால் நலமேனும் நட்டமேனும் இராததுபோல நாம் இறைவனை அடைவதால் அவருக்கு நலமேனும் நட்டமேனும் இல்லை. ஆளுல் நமக்கே தீக் காயும் மனிதனை யொப்ப நலமும் தீயிருந் தும் காயாத மனிதனை யொப்ப நட்டமு முண்டு. ஆதலால் கடவுளை நம்பி அவரை யடைய முயன்று பிறவி நோயென்னும் பெருநோயை அகற்றிக்கொள்ள வேண்டியது ஆறறிவுடைய மனிதனின் அறிவுடைச் செயலாம்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. ஆதலால்,
பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

இப்போது தெரிகின்றதா? கடவுள் என்று ஒருவர் இருந்துவிட்டுப் போகட்டுமே! நாம் ஏன் அவரை அடைய முற்பட வேண்டும்? என்று கேட்டாயே!

கமலா:- நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் ஒரே கடவுளை சிவன் என்றும், பிரம்மன் என்றும், விஷ்ணு என்றும் பலவிதமாகக் கூறுவதும், அம் மூவருக்கும் தேவியர் உள்ளார் என்று கூறுவதும், மற்றுமுள்ள புராண வழக்குகளும் பகுத்தறிவுள்ளவர் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாயில்லையே.

விமலா:- கமலா! அறியாது கூறினாய். முன்னோர்கள் கடவுளைப் பற்றிச் சொல்லி வைத்த முறையைக் கவனித்தால் என் உள்ளம் குளிர்கிறது.

கமலா:- என் உள்ளமும் குளிரும்படி சொல்லு பார்க்கலாம்.

விமலா:- ஒரு மனிதன் உபாத்தியாயர் வேலை பார்க்கிறான். இரவில் அவனே ஒரு மளிகைக் கடையில் கணக்கு எழுதி வருகின்றான். வீட்டில் மருந்துகள் செய்து வைத்துக் கொண்டு வைத்தியமும் செய்து வருகின்றான். அவனைப் பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகள் உபாத்தியாயர் என்றும், கடையிலுள்ளவர்கள் கணக்கப்பிள்ளை யென்றும், நோயாளிகள் வைத்தியர் என்றும் சொல்கின்றார்கள். இதுபோன்றே உருவும், ஊரும், பேரும் ஒன்று மில்லாத கடவுள் உலகில் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்து வருகின்றார். ஆகவே அவரைப் படைத்தற்

றெழிலைச் செய்யும்போது பிரம்மா வென்றும், காத்தற் றெழிலைச் செய்யும்போது விஷ்ணு வென்றும், அழித் தற் தொழிலைச் செய்யும்போது உருத்திரன் அல்லது சிவன் என்றும் சொல்லுகின்றார்கள்.

படைத்தற் தொழிலுக்கு வேண்டியது கல்வி. அக்கல்வி ''செந்தமிழும் நாப்பழக்கம்'' என்றபடி நாவின் பழக்கத்தினால் வரவேண்டியது. நாவில் இருப் பது. கல்விக்கே சரஸ்வதி என்று பெயர். ஆதலால் படைத்தற் கடவுளாகிய பிரம்மாவின் நாவில் சரஸ்வதி யிருக்கின்றாள் என்று சொல்லப்படுகின்றது. காக்கும் தொழிலுக்கு அவசியம் வேண்டற்பாலது பொருளா கும். செல்வமாகிய பொருளையே இலக்குமி என்று கூறுவர். அச்செல்வமும் எல்லோருக்கும் கொடுத்து உதவ வேண்டும் என்னும் எண்ணத்துடன் உள்ளத் திலிருந்தா லொழிய யாவரையும் காத்தல் கூடாது. ஆகவே காத்தற் தொழிலுடைய திருமாலின் நெஞ்சில் இலக்குமி இருக்கின்றாளென்று சொல்லப் படுகின்றது. இனி அழித்தற் றொழிலுக்கு இன்றியமை யாதது மலை போன்ற சக்தி. அதுவும் உடலிலேயே பொருந்தி யிருக்க வேண்டும். இதுபற்றியே அழிக்கும் தொழிலுடைய சிவனின் உடலிலேயே மலை மகளாகிய சக்தி யிருக்கின்றாள் என்று சொல்லப்படுகின்றது. உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு மனித ருக்கும் கல்வி நாவிலும், செல்வமும் அதைக் கொடுக்க வேண்டு மென்னும் எண்ணமும் நெஞ்சிலும், உடலில் மிகுந்த வலிமையாகிய சக்தியும் இருக்க வேண்டிய தவசிய மல்லவா? இவ்வாறு பொருள்களைப் படைத்த

லும், அறத்தைக் காத்தலும், பாபத்தை அழித்தலு மாகிய முத்தொழில்களும் உலகில் நடைபெறுவதால் ஆணும் பெண்ணும் அலியு மல்லாத கடவுளுக்குப் புராணங்கள் உருவங்களைக் கற்பித்து உண்மைத் தத்து வங்களை உருவகித்துக் கதைகளாகக் கூறுகின்றனவே யன்றி வேறில்லை. புராணங்களில் பொதிந்துள்ள கருத் துக்களை உணர வேண்டு மானால் குருமார்களிடம் வினவித் தெரிந்துகொள்ள வேண்டும். அறிவற்ற பாமரர்களை நல்வழிப் படுத்தும் பொருட்டே இவை யெல்லாம் முன்னோர்களால் நன்முறையாகக் கற்பிக் கப்பட்டன. இவற்றை அறியாது இகழ்வது பேதமை.

கமலா:- கடவுளின் இயல்பு யாது?

விமலா:- அகரவுயிர்போல் அறிவாகி யெங்கும் நிகரில் இறைவன் நிறைந்து நிற்கின்றான். அவன் இயற்கை அறிவினன். எல்லா மறிபவன். அஞ்ஞான மலங்கள் இயல்பாகவே இல்லாதவன். சுதந்திரன். சர்வ வல்லமை யுடையவன். பரிபூரணன். பேரரு ளுடையவன்.

கமலா:- விமலா அக்கா! கடவுள் சர்வ வல்ல மையுடையவர் என்றால் அவரால் சூரியனது கிரணங் களைக் குளிர்ச்சி பொருந்திய தாக்க முடியுமா? மலடி யின் மகனை ஏழு குழந்தைகளுக்குத் தந்தை யாக்க முடியுமா? நெருப்பைக் கீழ் நோக்கி எரிய வைக்க முடியுமா? சர்வ வல்லமை யுடையவர் என்றால் இவை களையெல்லாம் செய்துதானே ஆக வேண்டும். இவை

களையெல்லாம் செய்யும் ஆற்றல் அவருக்கு இல்லை யானால் உண்மையாக அவர் ஆண்டவர் அல்ல.

விமலா:- கமலா! நீ உனது புத்தியைத் தாறு மாறான பாதைகளில் விட்டுக்கொண்டிருக்கின்றாய். ஆதலால்தான் இத்தகைய பயனற்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றாய். ஆத்மீக விஷயத்திலே மனதைச் செலுத்தின ஒரு மங்கை இம்மாதிரி கேள்வி களைக் கேட்கவே மாட்டாள். நீ இவ்வாறுதான் எண்ணி எண்ணி உனது வாழ்வையும், காலத்தையும், சக்தியையும் வீணாக்குகிறாய். உனது கேள்விகள் அர்த்த மற்றவைகளாக இருக்கின்றன. அவர் உண்மையில் சர்வ வல்லமையுடையவர்தான். அவரால் ஊமையான மனிதனைப் பேசுமாறு செய்ய முடியும். நொண்டியை மலைமேல் ஏறுமாறு செய்ய முடியும். அவருக்குத்தான் செய்ய வேண்டுவதும் செய்ய வேண்டாததும் தெரியும். காக்கைக்கு எத்தனை பற்கள் இருக்கின்றன என்றும் யானை எத்தனை முட்டைகளை இடுகின்றது என்றும் கேட்கும் அறிவீனர்களது கேள்விகளை ஒத்திருக்கிறது உனது கேள்வியும். ஞான சொரூபியாக இருப்பதற்குப் பிரயத்தனப்படு. உனது உள்ளத்தைப் பரிசுத்தமாக்கு.

கமலா:- அக்கா! நீ கூறுகின்றாய் கடவுள் பேரருளாளர் என்று. நான் கூறுகின்றேன் கடவுள் மிக்க கொடூரம் வாய்ந்தவர் என்று. அவர் நீதியற்றவர். சில மக்களை மாத்திரம் மாட மாளிகையில் இருந்து கொண்டு மின்சார விசிறிக் கடியில் உண்டு உடுத்துக் களித்து ஆடம்பரமாக வாழச் செய்கிறார். சில மக்களை

குடிக்கக் கூழும், கட்டக் கந்தையும், குந்தக் குடிசையும் அற்றவராய், பரட்டைத் தலையோடும், பஞ்சடைந்த கண்ணேடும், அடைத்துப்போன செவியோடும், குழி விழுந்த கன்னத்தோடும், ஒட்டியுலர்ந்த நெஞ்சோடும் விலா வெலும்பு வெளித் தெரியும் உடம்புக்கூட்டோடும் கூடியவர்களாக வாழச் செய்கிருரே! இது என்ன நியாயம்? சிலர் ஆரோக்கியமாக வாழ ஒரு சிலர் நோயாளிகளாக வாழ்கின்றனரே! இதுதான் உன் ஆண்டவனின் நீதியோ?

விமலா:- கடவுள் உண்மையாகவே நியாயமுடையவர்தான். இவ்வுலகமானது சில கட்டுப்பட்ட விதிகளுக்கு இயைந்து நடக்கின்றது. அதிலும் ஒரு ஒழுங்கு இருக்கின்றது. நேர்மை அதனுடைய பலனைத் தருகின்றது. துன்மார்க்கம் அதன் தண்டனையை அனுபவிக்க வைக்கின்றது. கடவுள் எவருக்கும் தனியே உயர்வும் தாழ்வும் அளிப்பதில்லை. மனிதன் தனது சொந்தச் செயல்களால் ஏற்பட்ட கதிரையே அறுப்பான். நீ கூறியவை யாவும் முற்பிறவியில் மனிதன் செய்த செயல்களுக்கு ஏற்றவிதமே யாகும்.

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை" என்ற குறளைக் கவனி.

கமலா:- கடவுள் பரிபூரணர் என்று சொன்னுயே. அவர் எல்லாவற்றிலும் பரிபூரணத் தன்மையுடையவர் ஆனுல் அவருக்கு ஏன் உலகைப் படைக்கவேண்டும் என்ற ஆசை எழும்பவேண்டும்?

விமலா:- சிலருக்குத் தனக்கு ஆகவேண்டாத கற்பனைக் கேள்விகளைச் சிருஷ்டி செய்துகொள்வது ஒரு தனி ஆனந்தம். நீயும் அந்த ரகத்தைச் சேர்ந்தவள் போலும். "ஏன் கடவுள் இவ்வுலகத்தைப் படைத்தார்? எப்போது மனிதன் முதலில் பிறந்தான்? கடவுள் எப்படி இவ்வுலகத்தைப் படைத்தார். என்பன போன்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டு காலத்தை வீணுக்காதே. ஆத்மீகத் துறையிலே தெய்வீக வாழ்க்கையிலே மேம்பாடு அடைதற்கு இத்தகைய கேள்விகள் பயன் படும் என்று எண்ணுகின்ருயா? ஒருக்காலும் இல்லை. நீ கேட்கும் கேள்விகள் யாவும் விழலுக்கிறைத்த நீர் போன்று பயனற்றவைதான். நீ ஆத்மாவைப்பற்றிய அறிவை அறி. பின்பு இக்கேள்விகளுக்குரிய பதில்களை அறிவாய். மக்கள் சாதாரணமாக முதலிலேயே இவ்வாறுதான் தங்கள் மூளையைக் குழப்பிக்கொள்கின் ருர்கள். இவ்வாறு சந்தேகங்களை எழுப்பிக்கொள்வது ஆத்மீகத் துறையிலே செல்லாதிருப்பதற்காகச் செய் யும் தந்திரமாகும். நமக்கு முதலில் வேண்டுவது சாதனப்பயிற்சியும் வைராக்கியமுமே யாகும்.

கமலா:- கடவுள் என்பவர் உண்மையாகப் பேரருளாளராக இருந்தால், கருணைக் கடலாக இருப்பாரேயானுல் இந்த உலகத்திலே ஏன் துன்பம் இருக்கவேண்டும்?

விமலா:- துயர்தான் இவ்வுலகிலே மிகச் சிறந் தது. துயர்தான் நம் அகக்கண்களைத் திறக்கின்றது. துயர் வந்தால் நீ அந்த ஆண்டவனை நினைப்பாய் அது

உனது பொறுமையை அதிகரிக்கச் செய்கிறது. மாயையில் அகப்பட்டு உழலும் மக்களை உலகத் தந்தையிடம் செலுத்தும் சாதனமே துயர்.

கமலா:- கடவுள் ஏன் நல்ல எண்ணங்களும் நேர்மையுமே உடைய உலகமாக இவ்வுலகத்தைப் படைக்கக்கூடாது; ஏன் இங்கு தீய எண்ணங்கள் நிலவவேண்டும்; இது அவரது பரிசுத்தத் தன்மையை அழிக்காதோ?

விமலா:- இவ் வுலகில் நல்லவையும் தீயவையும் கலந்தே யிருக்கின்றன. தீயவை மிகவும் கெடுதலானவை யல்ல. ஒரு நாணயத்தின் இருபுறங்களைப் போன்றது நன்மையும் தீமையும். வெய்யில் இருந்தால் தானே நிழலின் அருமை தெரியும். ஒருவனுக்கு எது தீமையாக இருக்கிறதோ அதுவே மற்றவனுக்கு நன்மையாகத் தெரிகின்றது. ஒரு போக்கிரியும் நல்லவர் சேர்க்கையால் நலத்தினை அடைவான். மனிதருடைய உடலானது அவருடைய நன்மை தீமைகளுக்கு ஏற்ப அமைந்ததே. இந்தத் தத்துவத்தை நன்றாக உணர் நீ.

கமலா:- விமலா அக்கா! நீ கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. நமது வாழ்க்கை அனுபவத்திலிருந்து கடவுள் இருக்கிறார் என்பதை உன்னால் தெளிவுபடுத்த முடியுமா?

விமலா:- ஏன் முடியாது? உலகப் பிரசித்தி பெற்ற வைத்தியர்கள் கூடச் சில சமயங்களில் அரசர்களைக்கூடக் காப்பாற்ற முடியாதபடி ஆகிவிடுகிறது.

அவ்விதமே வைத்தியர்களாலுங் கைவிடப்பட்ட மிக்க நோயாளி ஒருவன் பிழைத்து எழுந்திருக்கிறன். இதுவே எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பரம்பொருள் இருக்கிறர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது அல்லவா?

கமலா:- கர்ம விதிகளினுல் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துவாயா?

விமலா:- சில மக்கள் எண்பதாண்டு உயிரோடிருக்கின்றனர். சிலர் வாலிப வயதிலேயே இறந்துவிடுகின்றனர்.. சிலர் குழந்தைகளாக இருக்கையில் இறந்துவிடுகின்றனர். இத்தகைய மாறுதல்களுக்கெல்லாம் காரணம் என்ன? இவ்வுலகில் ஒவ்வொருவரும் வாழவேண்டிய காலத்தை வரையறுத்தவர் கடவுள்தானே?

கமலா:- நமது உடலிலிருந்து கடவுள் இருக்கிறர் என்பதை நிரூபி.

விமலா:- புகைவண்டி நிலேயத்திலுள்ள எஞ்சின் தானுக நகருகின்றதா? இல்லேயே. ஓட்டுவதற்கு ஒருவர் இல்லாது அவ்வண்டி ஓடாது. அது போன்றே நமது உடலாகிய இந்த இஞ்சினும் கடவுள் அல்லது ஈசுவரன் என்ற ஓட்டுபவர் இல்லாது அசையாது. படைப்புப் பொருள்கள் அனேத்தும் பரமனின் பாதகமலங்களே நினேவூட்டுகின்றன. நம் தேகத்தில் இரத்தம் செல்லும் விதம் யாது? நாம் உண்ணும் உணவு சிவந்த நிறமுடைய இரத்தமாக மாறுவதெவ்வண்ணம்? கண்களேப் பாதுகாக்க இமைகள் வைத்தவர் யார்?

நம் தேகத்திலுள்ள இருதயம் மூளை இதர பாகங்கள் அனைத்தையும் இயக்குகின்றவர் யார்? ஆண்டவனே யன்றோ? மனித இயந்திரம் எவ்வளவு ஆச்சரியகர மாக அமைந்துள்ளது. கீதையில் நமதுயாக்கை "நவத் துவாரபுரி" என்று அழைக்கப்படுகின்றது.

கமலா:- இயற்கையில் இறைவன் உறைந்து நிற்கின்றார் என்பதற்குச் சில குறிப்புகள் தரமாட் டாயா?

விமலா:- கற் பாறைகளின் உள்ளேயிருக்கும் தேரைகளுக்கு உணவளிப்பது யார்? பழங்களுக்குத் தோல் வைத்துக் கெடாமல் இருக்கச் செய்வது யார்? எரியும் சக்தி வாய்ந்த பிராணவாயுவின் ஒரு பங்குடனே 4 பங்கு உப்பு வாயுவைச் சேர்த்தது யார்? சூரியன் பூமியிலிருந்து 9,28,30,000 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. அவ்வளவு தூரத்திற்கு அப்பாலிருக்கும் அனற்பிழம்பாய்த் திகழும் சூரியனிலிருந்து வெளிச்ச மும் உஷ்ணமும் பூமியில் வாழும் மக்களுக்குக் கிடைக் கிறது என்பது எவ்வளவு ஆச்சரியகரமானது. எண்ணிக்கையற்ற பல்லாயிரக்கணக்கான சூரியர்கள் நாம் பார்க்கும் சூரியனைவிட மிகப் பெரியவைகளாக இருக்கின்றன. அவை மிகவும் வெகு தூரத்திலிருப்ப தால் சிறிய நட்சத்திரங்களாக நமக்குத் தோன்றுகின் றன. அவைகளின் வெளிச்சம் பூமியை வந்தடைவ தற்கு லக்ஷக்கணக்கான வருடங்கள் ஆகின்றன என்று கூறினால் அவைகள் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்பதைச் சொல்வதெப்படி? வெளிச்சம் ஒரு வினாடி

யில் 1,86,000 மைல் செல்லுகின்றது. அப்படியிருந்தும் வெகு தூரத்திலிருக்கும் நட்சத்திரங்களிலிருந்து நமக்கு இன்னும் வெளிச்சமே வந்து சேரவில்லையென்றால் இதெல்லாம் எவ்வளவு ஆச்சரியகரமான விஷயம்! அது போகட்டும் காடுகளிலே யிருக்கும் மரங்களுக்கு நீர் ஊற்றுவது யார்? அத்தி முதல் எறும்பு ஈறான உயிர் அத்தனைக்கும் விருப்புற் றமுதளிக்கும் மெய்யன் யார்? கடவுள் இருந்துதானே இவைகளையெல்லாம் இயங்கச் செய்ய முடியும்.

கமலா:- நீ கூறுவது யாவும் உண்மையே சில பெரியாரது அருள் மொழிகளை எனக்குக் கூறுவாயா?

விமலா:- கடவுள் உன் இருதயத்தில் வசிக்கின்றார். அவர் உன்னுள் இருக்கின்றார். அவரில் நீ இருக்கின்றாய். சாத்வீக எண்ணங்கள் தாரையாய்ப் பிரவகிக்க உள்ளும் புறமும் சுத்தமாய் இரு. நீ மனதார கபடமற்ற எண்ணத்துடன் நடந்துகொள். ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின் தீதுண்டோ மன்னு முயிர்க்கு.'' என்னும் பொய்யில் புலவரின் பொய்யாமொழிக் கிணங்க நட. தைரியமாய் நான் கடவுள், நான் ஆத்மா என்று உணர்தற்குரிய நிலையில் நில். ஆன்ம அறிவை உணர். இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில். எவ்வுயிரும் பராபரன்றன் சன்னிதியாகும் என்பதற்கு இலக்காக நட. முதலில் ஒரு செய்யுள் இசைத்தனையே:-

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்

வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே.

என்று. அதன் உள்ளபடியுள்ள உட்கிடையை அறிந் திருப்பாயே யானால் இத்தனை பேசியிருக்க மாட்டாய். "கடவுள் உன் இருதயத்திலிருக்கின்றார். இறைவனாகிய அந்த அருட்ஜோதி உன்னுள் கலந்திருக்கின்றது. உன்னுள் கலந்த அந்த அருட்ஜோதியை உணராமல் எங்கெங்கெல்லாமோ வெளியில் இருக்கிறான் எம் மிறைவன் என்று தேடி யலைந்தால். நாம் கழிக்கும் நாட்களும் பயனற்றனதான்" என்ற கருத்தினை வெளி யிடுகின்றார்.

கமலா:- அக்கா அந்த ஜோதி வடிவமான கடவுள் என்னுள் இருந்தால் அதை நான் அறியும்படி செய்ய முடியுமா?

விமலா:- எல்லோரும் உணர முடியும். ஆனால் உலக இன்பங்களையே மெய்யென்று எண்ணி அதில் உழன்று கொண்டிருக்கும் அசுத்த மனத்தினால் அதனை உணர முடியாது. முதலில் அதற்குரிய சாதனைகளைப் பழகவேண்டும். அதாவது வெளிப் பொருள்களி லிருந்துவரும் இன்பங்களி லெல்லாம் வைராக்ய மடையவேண்டும். நீதி நூற்களிற் கூறியபடி நடந்து காயம் வாக்கு மனங்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டும். பின் மனதை விஷயங்களிற் செல்லவொட்டாது உள்ளே அடக்கி ஆத்மாவில் ஏகாக்கிரமாக நிறுத்தப் பழகவேண்டும். இவ்வாறெல்லாம் பழகின பிறகு, மனம் நிர்மலத்தன்மையை யடைந்த பிறகு அந்தப்

பரஞ்சோதியை உள்ளே உணர முடியும். இவ்வாறெல்லாம் மனத்தை நிர்மலமாக்கியுள்ள ஒரு சீடனுக்கு அந்தப் பரஞ்சோதியை உள்ளே தரிசிப்பிக்கும் பொருட்டு ஒரு குருவானவர் சீடனைக் கேட்ட கேள்விகளையும், அக்கேள்விகளுக்கு சீடன் அனுபவத்தில் உணர்ந்து உணர்ந்து சொன்ன விடைகளையும் சேர்த்து ஒரு பாட்டாகப் பாடியுள்ளது. அதை மட்டும் சொல்கின்றேன். ஆனால் நீ மேற்படி சாதனைகளைப் பழகி வருவாயேயானால் நீயும் குருவின் அருளால் அந்த சீடன் ஜோதியாகிய கடவுளை உள்ளே தரிசித்தபடி தரிசிக்கலாம். இந்த நிலையில் நீ அதை உணர்வது கடினம்.

அந்தச் செய்யுள்:—

சோதியா துனக்கு? பகலினி லிரவி
சுடர்விளக் காதிய இரவில்.
நீதியே, விளக்கை இரவியை யுணர
நிகழ்த்திடு சோதியா தெனக்கே?
ஆதியே! விழிகள் இமைத்திடு மளவில்?
மதி. எனின் மதியினை யறிய?
யாது? யான் அன்றி பிரபுநீ யெனவே
இலங்குறு சோதியொன் றுளதே.

கமலா:- விமலா அக்கா! இன்று உன்னிடமிருந்து நான் அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். நான் உன்னிடம் வரும்போது உன்னை என் வழிக்குக் கொண்டுவரவேண்டு மென்னும் எண்ணத்துடன் வந்தேன். ஆனால் நான்தான் உன்

வழிக்கு வரவேண்டியதாயிற்று இன்னும் பல விஷயங்களை உன்னிடம் பின்பு வந்து கேட்டு அதன்படி நடக்கவும் முயலுகின்றேன். கடவுள் எனக்கு ஞானத்தை உண்டுபண்ணும்படி என்னை ஆசீர்வதிக்க வேண்டும். வணக்கம். போய்வருகின்றேன்.



ஓம்.

கடவுள் ஒருவர் உண்டா?

அல்லது

கமலா விமலா சம்வாதம்.

இரண்டாவது சந்திப்பு.

கமலா:- விமலா அக்கா! வணக்கம்.

விமலா:- வா கமலா! பல நாட்களாக உன்னை இப்பக்கம் காணவே யில்லையே.

கமலா:- இப்பொழுதுதான் எனக்கு நீண்ட விடுமுறை கிடைத்திருக்கின்றது. இதற்கு முன்பெல்லாம் சிறு சிறு விடுமுறையாகவே இருந்தன. அப்பொழுது வர முடியவில்லை. அக்கா? அன்று உங்களிடம் வந்து பல சந்தேகங்கள் தெளிந்து கொண்டு சென்றேன் அல்லவா? அன்று உங்களுடைய வாக்கு வன்மையால் உங்களுடைய கருத்துக்கு என்னை இசையுமாறு செய்துவிட்டீர்கள். "பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால் மெய்போ லும்மே மெய்போ லும்மே" என்பதற்கியைய அன்று தாங்கள் கூறிய வனைத்தையும் மெய்யென வெண்ணினேன். உங்களுடைய சாமர்த்தியத்தாலும் சமயோஜித புத்தியாலும் என்னை அடக்கிவிட்டீர்கள். நான் பிறகு சில நீதி நூல்களை எடுத்து வாசித்துப் பார்த்தேன். அவை யனைத்தும் என் கொள்கைகளை வலியுறுத்துகின்றனவே யன்றி, உங்களுடைய கொள்கைகளை நிலை நிறுத்த

வில்லை என்பதை நன்கு அறிந்துகொண்டேன். இம்முறை நான் சில புதிதாகக் கற்றுக்கொண்டு வந்திருக்கிறேனுதலால் சென்ற தடவை மாதிரி என்னை உங்களால் ஏமாற்ற முடியாது. இந்தத் தடவை நீங்கள் தான் என் வழிக்கு வரப்போகின்றீர்கள். பாருங்கள்.

விமலா:- அப்படியா கமலா! நீதி நூல்களெல்லாம் கடவுள் இல்லை என்ற உன்னுடைய கருத்துக்களை வலியுறுத்துகின்றனவா? அடடா! இத்தனை நாட்களாக அவைகளை யெல்லாம் அறியா திருந்துவிட்டேனே! இனி உன்னைத்தான் நான் குருவாக அடையவேண்டும்போ லிருக்கிறது. கமலா! மஞ்சட்காமாலை யுடையவளுக்குப் பால்கூட மஞ்சளாகத்தான் தெரியும். முதலில் மருந்து சாப்பிட்டுக் காமாலையைப் போக்கிக்கொண்டு பார்த்தால்தான் அதன் உண்மையான வெள்ளைநிறம் தெரியும். எங்கே, உன்னுடைய மதியால் நீ கண்டுபிடித்த விஷயங்களை யெல்லாம் சற்றே கூறு பார்க்கலாம்.

கமலா:- அப்படி வாருங்கள் அக்கா வழிக்கு! மஞ்சட் காமாலைக் கண்ணுடையவள் நானு, நீங்களா என்பதை இனித் தெரிந்துகொள்ளப் போகின்றீர்கள். நான் படித்தவைகளை யெல்லாம் சொல்லுகின்றேன் கேளுங்கள். "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது உங்கள் கொள்கைதானே?

விமலா:- ஆம், அதில் சந்தேகம் என்ன?

கமலா:- அவனன்றி ஓரணுவும் அசையாது

என்பது உண்மையே யானல் நாம் இவ்வுலகில் செய்கின்ற நன்மையான காரியங்களும் தீமையான காரியங்களும் இறைவன் செய்விக்கும் செயல்கள்தானே; ஒரு தீய காரியத்தை ஒருவன் செய்தால் அத் தீய காரியம் செய்வதும்கூட அந்த இறைவன் செயல்தானே? அப்படி யிருக்க, தீமையான காரியங்களைச் சீவர்கள் செய்தால் அவர்கள்மீது பிழை கூறுதல் தகுமோ? நான் சென்ற முறை வினவிய சந்தேகத்திற்கு, மனிதன் முற்பிறவிகளில் செய்த நன்மை தீமைகளால் ஏற்பட்ட கதிரையே அறுப்பான் என்று கூறினீர்களே?

"நன்ஞரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன்
ஞர்தப்பினல்
தன்னலும் ஆடிச் சலித்திடுமோ அந்தத்
தன்மையைப்போல்
உன்னலி யானுந் திரிவதல் லால்மற் றுனைப்பிரிந்தால்
என்னலிங் காவதுண் டோஇறை வாகச்சி
யேகம்பனே."

என்று பட்டினத்தடிகள் கூறுகின்ரு ரல்லவா? இவ் வுலகின்கண் பிறந்த சீவர்கள் சூத்திரப் பாவைகள் போன்றவரே யென்ருல் சிறந்த நல்வினையும், இழிந்த தீவினையும் சூத்திரதாரியாகிய ஈசன் செய்விக்கும் செயலே யல்லவா? அவன் செய்யும் செயல்களுக்கு, சீவர்கள் பலனை அனுபவித்தல் முறையா? மோட்டார் வண்டி யொன்று ஒரு பையனின்மேல் ஏறிக் கொன்று விட்டது என்ருல் அம் மோட்டாரைத் தண்டிப்பவருண்டோ? மோட்டார் ஓட்டும் ஆளே யல்லவோ தண்டிக்கவேண்டும்! எப்படி யிருக்கின்றது உங்கள்

கடவுள் நியாயம்! தான் செய்வித்த காரியங்களுக்காகச் சீவர்களுக்குப் பாவிகளென்று பட்டங் கட்டித் தண்டிப்பதா?

விமலா:- கமலா! ஒரு விதத்தில் மகிழ்ச்சி யடைகின்றேன்; சில நூற்களை வாசித்துப் பார்த்திருக்கின்றாய். ஆனால், உன்னுடைய மனதில் ஒரு சில கருத்துக்களை வைத்துக்கொண்டு, நூல்களின் வாசகங்கள் எவையாவது அக் கருத்துக்களை ஆதரிக்கின்றாற் போலத் தோன்றுகின்றனவா? என்பதையே நோக்கமாகக் கொண்டு வாசித்துப் பார்த்திருக்கின்றாய். இன்னும் சற்று ஊன்றிக் கவனித்துப் பார்த்திருந்தாயேயானால் இக் கேள்விக்குரிய பதிலையும் அறிந்திருப்பாய். மெய்ந்நெறியை மறந்து அறிவிலிகள் பேசுவதுபோல் பேசுகின்றாய். வேத சாஸ்திரங்களைக் கசடறக் கற்காத குற்றத்தாலேயே இச் சந்தேகம் உன் உள்ளத்து எழுந்தது. நான் கூறுவதைக் கவனமாகக் கேள். நாம் புறக் கண்களால் காணுகின்ற இச் சராசரப் பொருள்கள் எல்லாம், இறைவனின் படைப்புப் பொருள்களே, ஆனால் நமக்கு உண்டாகும் நான் எனது என்னும் அகந்தை மமதைகளும், கோபங்கள், ஆசைகள் ஆகிய மனதில் தோன்றும் உணர்வுகள் அனைத்தும் சீவர்களின் சிருஷ்டியே யாகும். இவைகள் ஆண்டவனின் படைப்புப் பொருள்கள் அல்ல. கைவல்லிய நவநீதம் சந்தேகந் தெளிதற் படலத்தின் 55வது செய்யுள் இந்த விடையைப் பகர்கின்றது பார்:-

"திகழ்ந்த விசனார் சிருட்டியுஞ் சீவனார் சிருட்டியும்
வெவ்வேறே

சகந்த னிற்பொது வீசனுர் சிருட்டிகள் சராசரப்
பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்கள் ஆசைக
ளிவையெல்லாம்
இகழ்ந்த சீவனுர் சிருட்டிக ளாகுங்கா ணீசனுர்
செயலன்றே.''

கமலா:- அக்கா! "அவனன்றி ஒரு அணுவும் அசையாது" என்பது எனது கொள்கைதான் என்று முன்பு ஒத்துக்கொண்டு, இப்பொழுது முன்னுக்குப் பின் முரணுக, அகந்தை, அபிமானம், கோபம், ஆசை ஆகிய இவைகளெல்லாம் ஈசன் செயலன்று என்றும் இவைக ளெல்லாம் சீவர்கள் செயலே யென்றும் கூறுகின்றீர்களே! இப்படிச் சமயத்திற்குத் தகுந்ததுபோல் பேசுவதுதான் உங்கள் கொள்கைபோலும். நீங்கள் மேற்கொண்ட நூல்களும் உங்களைப் போன்றேதான் பலவாறு மாறி மாறிப் பேசுகின்றன போலும். இவ்வாறு பல விதமாய்ப் பேசும் உங்கள் கொள்கையை யாராவது அறிவுடையவர்கள் ஒத்துக்கொள்வார்களா? இனியாவது இத் தவருன கொள்கைகளை விட்டு என் வழிக்கு வாருங்கள்.

விமலா:- கமலா! அவசரப்படாதே. ஆத்திரக் காரிக்குப் புத்தி மட்டு. முற்றிலும் சொல்வதற்கு முன் ஆராய்ந்து பாராமல் ஆன்ருேர்களின் நூல்களுக்குக் கூடக் குற்றங் கற்பிக்க முற்பட்டுவிட்டாயே. நீ முழு மதி யுடையவள் என்பதைக் காட்டிவிட்டாய்.

புது முறையாகக் கட்டப்பட்டுள்ள இந்த வீடு யாருடையது? யார் இவ்வித நவீன முறையில் கட்டி

யது? என்று ஒருவனைக் கேட்டபோது, அவன் "இது இவ்வூர் நகராண்மைக் கழகத் தலைவரின் வீடு. ஐம்பதினாயிரம்ரூபாய் செலவு செய்து அவர்தான் இவ் வீட்டைக் கட்டினார்" என்று முதலில் பதில் கூறினான். பின் இருவரும் அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்து பார்க்கும்போது அதில் சிறு தவறுகளையும், சரியாகக் கட்டப் படாததையுங் கண்டு, மறுபடியும் அவனைப் பார்த்து, "இவ்வளவு அழகிய வீட்டைக் கட்டிய அவர் ஏன் சரியாகச் செய்ய வில்லை?" என்று கேட்டபோது, "அவர் சிற்பி கேட்ட பொருள்களை யெல்லாம் சரிவர வாங்கிக் கொடுத்தும், தகுந்த சம்பளம் கொடுத்தும், சரியான முறையில் கட்டும்படிதான் சொல்லியிருந்தார். ஆனால் சிற்பி நன்றாகத் தெரிந்தவ னில்லைபோலிருக்கின்றது. அவன் தான் இப்படிக் கட்டிவிட்டான். சிற்பியினுடைய பிழையே இது." என்று அவன் மறுபடி பதில் சொன்னான். அது தவறாகுமா? இவ்வளவு ஆராய்வற்ற உன் மூளையால் தானோ நீதி நூல்களை யெல்லாம் ஆய்ந்து முடிவு கண்டேன் என்று கூறுகின்றாய்!

கடவுள் எல்லாவற்றிற்கும் காரணர்தான். அவரன்றி ஒரு அணுவும் அசையாதுதான். ஆனால் அவர் நேரே எதையும் செய்வதில்லை. அவர் சந்நிதான பலத்தினால் பிரகிருதி யென்னும் இயற்கை பலவற்றை உண்டுபண்ணுகின்றது. சீவர்கள் சிலவற்றை உண்டு பண்ணுகின்றார்கள். வெளிச்ச மில்லாமல் கண் பார்க்க முடியாதது போல இறைவனிலரேல் இயற்கையும் இயங்காது. சீவர்களும் செயலற்றவராவர். ஆகவே இயற்கையின் மூலம் நடைபெறுவதை நேரே ஈசன்

செயலென்றும், சீவர் மூலம் நடைபெறுவதைச் சீவர் செயலென்றும் பெரியோர் கூறுவர். இயற்கை அறிவற்ற பொருளாதலால் இயற்கை செய்ததென்று சொல்வதில்லை. இன்னும், பின்னும் இவற்றை நன்கு விளக்கிக் கூறுவேன். இப்போது இதில் இன்னும் ஏதேனும் ஐயம் உண்டானால் கேள்.

கமலா:- அப்படியானால், ஈச சிருட்டிக்கும், சீவ சிருட்டிக்கும் வேறுபாடு என்ன?

விமலா:- திரிமூர்த்தி ரூபமான இறைவனின் படைப்பு, உயிர்களுக் கெல்லாம் மோக்ஷ வீடு அடைவதற்குரிய சாதனங்களாகும். அவைகள்தான் நம் உடல், உள்ளம், உலகம் முதலிய பொருள்களாகும். இறைவன் படைப்பாகிய மண், நீர், நெருப்பு முதலியவற்றைக் கொண்டு சீவர்கள் வீடு முதலியவற்றைக் கட்டிக் கொள்வதும் சமையல் முதலியவற்றைச் செய்துகொள்வதும் போன்று, இறைவன் படைப்பாகிய உள்ளத்தினால் சீவர்கள் அகந்தை, மமதை, கோபம், ஆசை ஆகியவைகளை உண்டாக்கிக் கொள்கின்றார்கள். இந்தச் சீவ சிருட்டிகளெல்லாம் அவர்களை மீண்டும் மீண்டும் இவ்வவனியில் பிறக்கச்செய்யும் கட்டுக்களாகும். ஆண்டவனின் படைப்புப் பொருள்கள் இல்லாதொழியுமாயின் எவர் ஒருவருக்கும் பிறப் பிறப்புக்கள் இல்லா தொழியா. ஆனால் அகந்தை, கோபம் முதலான சீவ சிருஷ்டிகள் நசித்துப் போமாயின் பிறப் பிறப்பற்ற நிலையை எய்தி விடலாம்.

இறைவன் படைப்புக்களாகிய இயங்கியற் பொருள்களும், நிலையியற் பொருள்களும் பிரளய

காலத்திலே அழிந்து விட்டாலும் பிறவி நாசத்தை எவரும் அடையார். இறைவனுடைய சிருட்டிப் பொருள்களாகிய இடம், காலம், தேகம் முதலியன அழியாமலிருக்கும் போதே அகந்தை யாதிகளை ஞானத்தால் நாசம் செய்தால் வீடு பேற்றை அடையலாம். இவ்வாறு இவ்வுடலுட னிருக்கும்போதே முக்தி யடைந்தவர்களுக்குத் தான் சீவன் முக்தர்க ளென்று பெயராகும். பாசமாகிய மயக்கங்கள் சீவர்களின் படைப்புப் பொருள்களே யல்லாமல் பசுபதியின் செயலல்ல என்பதை நன்ருக அறிந்துகொள். இந்த மயக்கங்களை மனிதர்கள் தங்களுக் குள்ளேயே படைத்துக் கொள்வதால்தான் நன்மை தீமைகள் செய்து வினைப் பயன்களையும் பின்பு எய்துகின்ருர்கள்.

கமலா:- ஆசை, அகந்தை முதலானவைகளெல்லாம் இறைவன் படைத்த பொருள்க ளல்ல. மனிதர்களின் படைப்புக்களே என்பதற்கு, இன்னும் சிறந்த மேற்கோள் காட்ட முடியுமா?

விமலா:- அப்படிக் கேள் கமலா! இறைவன் வாக்கியம் என்று கூறப்படும் வேதத்திலேயே எடுத்துக் காட்டுகின்றேன். முண்டகோபநிடதத்தில், மூன்ருவது முண்டகத்தில், முதலாவது கண்டத்தில் முதலாவது மந்திரம் கூறுகின்றதாவது:—

"இரண்டு பறவைகள், ஒன்ருகச் சேர்ந்திருப்பவைகள், ஒன்றுக் கொன்று நட்புடையவைகள், ஒரே மரத்தில் வாழ்ந்திருப்பவைகள். அவற்றில் ஒன்று அம் மரத்தின் கனியை நன்று நன்று என்று சுவைத்து

உண்ணும். ஆனல் மற்றென்று தின்னமல் பார்த்துக் கொண்டே யிருக்கும்.''

இவ்வாறு குறிப்பாகக் கூறும் அதர்வண வேதத்தில் நம்முடைய சரீரமானது ஒரு மரமாகவும், அதில் இருக்கின்ற சீவாத்மா, பரமாத்மா என்னும் இரண்டும் இரண்டு பறவையாகவும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் இறைவனுகிய பரமாத்மா இச்சரீரத்தி லுண்டாகும் கரும பலன்களாகிய சுக துக்கங்களில் விருப்பு வெறுப்பை யடையாமலும், அவற்றை அனுபவிக்காமலும் சாக்ஷியாகப் பார்த்துக்கொண்டு மட்டும் இருக்கின்றது என்றும், ஜீவனுகிய பக்ஷியோ விருப்பு வெறுப்புக்களை யடைந்து, அப் பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே தம்முடைய உள்ளத்திலே தோன்றும் காமம், குரோதம், மதம், லோபம், மோகம், மாச்சரியம் என்னும் ஆறு உட்பகைகளையும், தம் படைப்பே என்றுணராமல் இறைவன் செயலென்று கருதுபவர்கள் பிறப் பிறப்பாகிய கடலிலேயே எப்பொழுதும் உழன்றுகொண் டிருப்பார்கள். ஒருவனுடைய உடலிலே வியாதி யிருக்குமானல் அவன் அவ் வியாதியைத் தடுக்கத் தக்க சிகிச்சைகள் செய்யாது அபத்தியம் செய்து வருவானயின் அந்நோய் மிகவும் அதிகமாகிப் பின்னும் பலவகையான துன்பங்களிலேயே ஆழ்ந்து போவதை நாம் நேரிற் கண்களிற் காணுகின்ருே மல்லவா? அவ்வாறே ஒருவன் தன் உட்பகைகளைத் தெரிந்துகொண்டு, அவைகள் தன்னல் படைக்கப் பட்

டவைகளே யல்லாமல் இறைவனால் படைக்கப் பட்டனவல்ல என்பதை நன்கு அறிந்து, அக்குற்றங்களைக் களையா திருப்பானே யானால் நரகம் முதலிய மிக்க துயர்களை யுறுவன். மனத்திலுள்ள மாசுகளை யெல்லாம் தன் செயலே யென் றுணர்பவன் அவைகளை நீக்கி நன் மார்க்கத்திற் சென்று, புண்ணிய மிகுந்து உள்ளத் தூய்மை யுற்று, ஞானியாகி வீட்டினையும் பெறுவான். செங்கோல் செலுத்தும் மன்னன் ஒருவன் தனது நியதிப்படி நடவாதவர்களைத் தண்டித்து, நடப்போருக்குத் தேவையான நன்மைகளைச் செய்வது போன்று எல்லாம் வல்ல கடவுளும் தமது அருள் நூலில் விலக்கியவற்றைச் செய்யா தொழித்து விதித்தவற்றை விருப்பமாகச் செய்வோருக்கு மேல் நிலையையும், விலக்கியவற்றைச் செய்து விதித்தவற்றைத் தவிர்வோருக்குக் கீழ் நிலையையும் அளிப்பார்.

கமலா:- சரிதான் விமலா அக்கா! எல்லோருக்கும் பொதுவான கடவுள் ஒரு சிலருக்கு வாழ்வு அளிப்பதும், ஒரு சிலருக்குத் தாழ்வு அளிப்பதுந்தான் முறையோ? நன்று நன்று நீ போற்றும் கடவுளின் செய்கை. இப் பாரபக்ஷ முடைய கடவுளைத்தான் பணிந்து, போற்றி, வணங்குதல் வேண்டுமோ?

விமலா:- கமலா! எதைப் பற்றியும் முற்றும் அறிவதற்கு முன்னரே அதை ஏளனமாகப் பேசுதல் கூடாது. ஒரு தந்தைக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் நற்குணங்களுக்கு உறைவிடமானவன். தூய ஒழுக்க நெறி யுடையோன்.

இவனைப் பெறுதற்கு இவன் பெற்றோர்கள் என்ன தவம் செய்தார்களோ எனச் சான்றோர் கூறும் தன்மை வாய்ந்தவன். மற்றொரு புதல்வன் குற்ற முடையவன். நற்குணங்கள் பொருந்தாதவன். தந்தையானவன் நன்னெறியிற் செல்லும் மகனைக் கண்டு மன மகிழ்ந்து அவனுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து அவனை ஊக்குவித்தான். தீநெறியிற் செல்லும் புதல்வனை மகிழ்வித்து ஊக்குவித்தால் அவன் நன்னெறியில் திரும்பாது தீமையுறுவான் என்றெண்ணி, அவன் நல் வாழ்வு வாழ்ந்து இன்பமடைய வேண்டும் என்னும் கருணையினால் அவனைத் தண்டித்துத் துன்புறுத்தி, நல் வழியில் பயிலுமாறு செய்தான். இந்தப் பிதாவுக்கு இஃது எவ்வாறு பாரபக்ஷ மற்ற செயலாமோ அவ்வாறே இறைவனும் நீதி நெறியில் சென்ற சிலரை இன்புடன் வாழச் செய்வதும், தீ நெறியில் சென்றவர்களை அவர்கள் நன்னெறியில் திரும்பும் பொருட்டுத் தண்டிப்பதும் பாரபக்ஷ மற்ற தன்மையையே யாம். இறைவன் அறமியற்றும் நல்லோரை வாழ்விப்பதால் அறக்கருணையுடையவ ரென்றும், மறமியற்றும் தீயோரைத் தண்டித்து மறத்தினை நீக்கி யருள்வதால் மறக் கருணையுடையவ ரென்றும் கூறப்படுகின்றார். கமலா! நீ இப்போது கேட்ட கேள்வியையே முன் வந்திருந்த போதும் கேட்டாய். அப்போதும் பதில் கூறினேன் என்று எண்ணுகிறேன். இவ் வுலகில் எவனொருவன் மிகுந்த துன்பத்தினை யடைகின்றானோ அவன், "இவையெல்லாம் இறைவன் என்பாற் கருணைகொண்டு என்னை நல்வழிப்படுத்துதற் குரிய செயல்களே யாகும்.

இறைவன் பார்வை என்மே லுளது'' என எண்ணி இறைவன்பால் நிறைந்த அன்பு செலுத்தி, அத் துய ரினை மறந்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால் “இடுக்கண் வருங்கால் நகுக'' என்ற வள்ளுவனார் வாக்கிற் கிணங்க நடப்பதற்கு இயலும் துன்பமெல் லாம் இன்பமாக மாறும்.

கமலா:- அக்கா! கடவுளை நீங்கள் சொல்கின்ற படியே நீதியுடையவர் என்று வைத்துக்கொண்டா லும் மிகுந்த மதியுடையவர் என்று கூறவியலாது. கடவுளே எல்லாப் பிராணிகளையும் படைத்தார் என்று கூறுகின்றீர்கள் . எல்லாப் பிராணிகளிலும் மிகுந்த அறிவுடையவரும் செயற் கரிய பல செய்கைகளைச் செய்பவருமான மனிதரைச் சிறிய உருவமுடைய வராகப் படைத்து அறிவில்லா மிருகமாகிய யானையை எவ்வளவு பெரியதாகப் படைத்திருக்கின்றார் பாருங் கள். இதனாலேயே அவர் தராதரம் அறியாதவர் என்று தெரிகின்றதல்லவா?

விமலா:- கமலா! இதுவரை உன்னை ஏதோ சிறிது மதியுடையாய் என்றல்லவோ கருதியிருந்தேன். கடவுளை மதி குறைந்தவர் என்று கூறும் உன்னுடைய மதியே மதி. இத்தகைய ஆராய்ச்சி செய்து இறைவனை யும் குறை கூறிய உனக்குத்தான் உலக அறிஞர்களில் முதற் பரிசு கொடுக்க வேண்டும். முழுமதி யுடையாய்! சற்றுக் கவனி. மனிதன் பிராணிகளுக்குள் சிறந்தவனே தான். அறிவு நிறைந்தவனேதான். ஆயினும் கடவு ளறிவாகிய கடலில் ஒரு துளியளவு அறிவு கூட

உடையவனல்ல. மனிதருக்கு இத்தகைய மிகுந்த அறிவு தோன்றுவதற்கு இடமாக மனித மூளையை வகுத்த வரும் இறைவனே என்று அறிவாயாக! அதனால் மனிதன் மற்றப் பிராணிகளைவிட எவ்வளவோ அறிவு மிகுந்தவனாக விருக்கின்றான். அதனாலேதான் மனிதன் மற்றப் பிராணிகளைப் போல் கிடைத்த உணவுகளை அப்படியே உண்ணாமல் பல்வகை யுணவுகளை ஒன்றாகச் சேர்த்துப் பக்குவம் செய்து சுவை மிகுந்தனவாக்கி உண்டு இன்புறுகின்றான். அதனால்தானே தனது உடலுக்குத் தக்க சிறு வயிறாக வாய்த்திருப்பினும் அவ் வயிற்றைச் சுவை மிகுந்த உணவுகளால் நிரப்புவதற் காக உணவும், பொருளுந் தேடுவதற்கே ஆயுட் காலம் போதாமல் உழலுகின்றான். தன்னைப் பற்றியும் கடவு ளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்கே காலம் கிடைக்க வில்லையே. நீ சொல்லுகின்றபடி மனிதன் யானையைப் போல் பல மடங்கு பெரிய உருவ முடையவனாகப் படைக்கப்பட் டிருந்தால் இவ் வுலகில் அவனுக்கு உணவுதான் காணுமா? இப்பொழுதே உணவுப் பஞ்சம் மிகுதியால் மனிதர் வாடுகின்றனரே. அரை வயிற் றுக்குக்கூட உணவு கிடைப்பது அரிதாயிருக்கின்றதே. உன் கூரிய மதியால் ஆய்ந்து பார். மனிதன் உருவில் சிறியவனா யிருந்தாலும் பெரிய யானையையும், சிங்கத் தையும் அடக்கி யாள வில்லையா? மலைகளையும் தகர்த் தெறிந்து மடுவாக்க வில்லையா? வான விமானங்களைச் செய்து வார்கடல் கடக்க வில்லையா? மனிதர் பெரிய உருவுடையவரா யிருந்தால் எவ்வளவு பெரிய விமானம் செய்ய வேண்டும்? பெரிய உடல் எதற்கு வேண்டும்?

யானை முதலியவை பெரியனவா யிருப்பதனுலேதான் அவற்றைக் கொண்டு மனிதன் பெரிய வேலையைச் செய்வித்துக் கொள்கிறுன். கமலா உன்னைப் போன்று மதி மிகுந்த நாஸ்திகன் ஒருவன் உன் கேள்வி போன்ற கேள்வியை மனத்திலேயே கேட்டுக்கொண்டு பூருவ புண்ணியத்தால் கடவுளருளால் உடனே ஆஸ்திகனுன கதையைக் கேட்டதில்லையா? அக் கதையைச் சொல்லு கிறேன் கேள்.

உன்னைப் போன்று முழு மதியுடைய நாத்திகன் ஒருவன் யாத்திரை செய்தான். வெயில் வேளையில் ஓர் ஆல மரத்தின் நிழலில் களைதீரப் படுத்தான். எப்பொழுதும் கடவுள் என்று ஒருவர் இல்லையென்று வாதாடி ஆத்திகர்களை மடக்க வேண்டும் என்பதற்காகவே ஆய்ந்துகொண் டிருப்பவன் அவன். ஆதலால் மல் லார்ந்து படுத்து மரத்தை மேலே பார்த்தவுடன் ஓர் விஷயத்தைக் கண்டு பிடித்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தான். கடவுள் உண்டு என்று சொல்கின்றவர் கள் எல்லாத் தாவரங்களையும் அவரே படைத்ததாகக் கூறுகின்றுர்களே. ஒரு விரல் பருமனுள்ள தரையில் படரும் பூசணிக் கொடிக்குப் பெரிய காயை உண்டு பண்ணிய அவர் இவ்வளவு மிகப் பெரிய ஆல மரத் திற்கு இந்தச் சிறு காய்களை உண்டுபண்ணி யிருக்கின் ருரே. உங்கள் கடவுள் எவ்வளவு புத்தி யுடையவர் பார்த்தீர்களா? என்று கேட்டால் அவர்கள் விடை பகர முடியாமல் வெட்கித் தலை குனிவார்களல்லவா? என்று எண்ணினுன். உடனே அவன் புருவத்தில் ஓர் காய் விழுந்தது. அதுவே மிகுந்த வலியை உண்டு

பண்ணியது. அப்பொழுதே அவனுக்கு அறிவு பிறந்தது. ஆல மரத்திற்குத் தக்க காயைக் கடவுள் படைத்திருந்தால் இன்று நம் கதி என்ன ஆவது? கடவுள் மிகவும் பேரறிவுடையவர். அவரை உண்டு என்பவர்களும் பேரறிஞர்களே என்று அறிந்து அன்று முதல் அவன் ஆத்திகனானன். அந்த நாத்திகனுடைய புத்தியைப் போன்றல்லவா உன் புத்தியு மிருக்கின்றது!

மனித உடலாகிய யந்திரத்தைப் பற்றி ஆய்ந்து பார். எவ்விதமாகக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனித வியந்திரத்தின் தலைமை அலுவலகமாகிய மூளையின் அமைப்பு முழுமையும் அறிய யாரால் இயலும்? உடம்பிலுள்ள ஒரு உரோமத்தின் தன்மையைக் கூட முற்றிலும் உணர்ந்தவரில்லையே. ஒரு துளியளவு இரத்தத்தில் என்னென்ன பொருள்கள் அடங்கியிருக்கின்றனவென்று மிகப்பெரிய விஞ்ஞானிகளாலும் இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லையே! உலகிலுள்ள பொருள்கள் எத்தனை விதங்களாகவிருக்கின்றன. ஒரு அணு எத்தனைவித இயங்கு மணுக்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. நட்சத்திரங்கள் போன்ற பெரிய அண்டங்களில் எத்தனை விதப் பொருள்களிருக்கின்றன. அவை எவ்வித அணுக்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆகர்ஷண சக்தி முதலாகிய எத்தனை சக்திகளை யுடையனவா யிருக்கின்றன என்பவற்றையெல்லாம் எவராவது அறிந்து சொல்ல முடியுமா? இவற்றையெல்லாம் உண்டுபண்ணியவர் இறைவனேயல்லவா? சூரியனின் பிரகாசத்தால் சந்திரனும் ஒளியுடையதாய்த் தெரிவது போன்று, அக் கடவுளின்

அறிவொளிக் கடலில் ஓர் துளி யளவு எல்லோருடைய புத்தியிலும் படுவதால் எல்லோரும் சிறிது சிறிது அறிவுடையவர் போலத் தெரிகின்றனர். கடவுள் பேரறிவுப் பிழம்பு. அறிவே அவரது திருவுருவம். அவரைப் பற்றிச் சிறிதளவாவது அறிந்துள்ளவனே பேரறிவாளனுவான். கடவுள் ஒருவர் இருக்கின்ருர் என்று கூட அறியாதவன் எவ்வளவு மிகுந்த மதியுடையனுயினும் உலகிலேயே பெரிய விஞ்ஞானியே யாயினும் அவன் அறிவற்றவனே. கடவுளை நம்புகின்றவன் எவ்வளவு அற்ப மதி யுடையவனுயினும் கடவுளை வழிபட்டுப் பேரின்ப நிலையை யெய்துவன். இதுபற்றியே யன்ருே திருவள்ளுவர் "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் நற்ருள் தொழாஅ ரெனின்." என்று கூறுகின்ருர். இதுவன்ருே பொய்யா மொழி. கமலா! பேரறிவுப் பிழம் பாகிய இறைவனை அறிவதற்கு உயர்ந்த, கூரிய, விசாலமான, ஆழ்ந்த, ஒளிபெற்ற, நிர்மலமான, கலக்கமற்ற அறிவு வேண்டும். அத்தகைய அறிவை அவருடைய அருளால்தான் அடைய முடியும். ஆழ்ந்த அமைதியான தியானத்தில்தான் அவரை அறியமுடியும். குறுகிய குதர்க்க யுக்திகளை நீக்கி அவரிடத்தில் அன்பு செலுத்தி, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரை வேண்டிக்கொள். அவர் உன் அறிவைத் தெளியச் செய்வார். இறைவன் ஒருவர் உள்ளார் என்று தெரிவதற்கு முன்பாகவே அவரைக் குறை கூருதே.

கமலா:- அம்மம்மா! கடவுளைக் குறை கூறிவிட்டே னென்று எவ்வளவு கோபம் வந்துவிட்டது.

விமலா:- நீ அறியாமையினுலேதானே கூறு கின்ருய். இதில் கோபமென்ன? அறிவுருவாய அமலனை நம் சிற்றறிவால் அளவு படுத்த வியலாது என்றுதான் கூறினேன். இன்னமும் உள்ள சந்தேகங்களை யெல் லாம் பயப்படாமல் தைரியமாய்க் கேள். தக்க பதில் கூறுகின்றேன். உன் உள்ளம் தெளிவினை யடைய வேண்டுமல்லவா? அறியாமையினுற் கேட்கும் கேள்வி களுக்கு அறிவுடையோர் தக்க பதில் கூறித் தேற்று வார்களே யன்றி, கோபிக்க மாட்டார்கள். இறைவ னுடைய மதியோடு உன்னுடைய மதியை ஒப்பிட்டு நோக்கலாகாது என்று கூறியது, நான் கோபமாகச் சொன்னதுபோல் உனக்குப் பட்டுள்ளது. நீ ஐயங்களை யெல்லாம் மனத்தில் வைத்துக்கொள்ளாமல் கேட்டுத் தெளிந்துகொள்கிருயே என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியே. கேள் கமலா!

கமலா:- அக்கா! திருவள்ளுவர் இறைவனை "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்று கூறு கின்ருர். இன்னும் சில நூல்களில், இறைவன் "ஊர் இலான் குணம் குறி இலான் செயல் இலான்" என்றும் கூறப்பட்டுள்ளது. நீங்களோ இறைவன் அறக்கருணை மறக் கருணை யென்னும் குணங்களை யுடையவர் என் றும், நல்லோர்க்கு நன்மை செய்தலும் தீயோர்களைத் தண்டித்தலும் உலகப் பொருள்களைப் படைத்தலு மாகிய செயல்களை யுடையவ ரென்றும் கூறுகின் றீர்கள். இவற்றுள் எது சரி. இவற்றை யெல்லாம் ஆலோசிக்கும்போது கடவுள் என்பது சிலரால் மனத் தில் உண்டுபண்ணிக் கொள்ளப்படும் கற்பனையே

யென்றும், ஆதலால்தான் கடவுளை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கூறுகின்றார்கள் என்றும் தெரிகிறதே. இதனாலேயே யல்லவா கடவுளைச் சிலர் குணங்களையும் செயல்களையும் உடையவர் என்றும் சிலர் குணங்களும் செயல்களும் இல்லாதவர் என்றும் இயம்புகின்றார்கள்.

விமலா;- கமலா! அறியாது கூறுகின்றாய். கடவுள் உன்னுள்ளே யிருப்பதனால்தான் நீ இவ்வாறு கூட பேசவும் முடிகின்றது. அவர் உன்னுள் இல்லாவிடின் உன்னால் பேசவும் நினைக்கவும்கூட முடியாது. உண்மையில் இறைவன்-

"ஊரிலான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒருமுன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல்போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுள்ளே நின்றான்."

தான்.

ஆயினும் பக்தர்கள் ஒருருவமும் இல்லாத அவருக்குப் பல உருவங்களைக் கற்பித்து வழிபடுவதும், பெய ரொன்றும் இல்லாத அவருக்குப் பல்லாயிரம் பெயர்களைக் கூறிப் பாடுவதும், செய லொன்றும் இல்லாத அவரே எல்லாச் செயல்களையும் செய்கின்றார் என்று இயம்புவதும், எங்கும் நிறைந்து எல்லாத் திக்குகளிலும் அப்பாலாயும் இருக்கின்ற அவரைச் சில புண்ணிய க்ஷேத்திரங்களிலும் கோவில்களிலும் சிறப்பாக இருக்கின்றார் என்று கொண்டு யாத்திரைகள் செய்து சேவிப்பதும் செய்கின்றார்கள். "வேண்டுதல் வேண்

டாமை யிலான்'' என்று விருப்பு வெறுப்பு முதலிய ஒரு குணமும் இல்லாதவர் கடவுள் எனக் கூறிய வள்ளுவரே பின் ''எண் குணத்தான்'' என்று எண்ணத் தக்க பல குணங்களை யுடையவர் கடவுள் எனக் கூறு வதைக் கவனிப்பாயாக.

கமலா:- குணங்களும், செயல்களும் ஒன்று மில்லாத கடவுளைக் குணங்களும், செயல்களும் உடை யவர் என்று கூறுவது எப்படி யக்கா பொருந்தும்? இது கண்ணில்லான் எல்லாவற்றையும் பார்க்கின்றான்; வாயில்லான் சொற்பொழி வாற்றுகின்றான்; காலில் லான் வேகமாக ஓடுகின்றான்; என்று சொல்பவைகளை யல்லவோ ஒத்திருக்கின்றது!

விமலா:- கமலா! சற்று சாவதானமாகக் கேள். கூறுகின்றேன். கூரிய மதி கொண்டு நோக்கு. நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். தற்காலத்தில் உள்ள விஞ்ஞானிகள் இவ் வுலகத்தில் காணப்படும் எல்லாப் பொருள்களும் 92 வகையான மூலப் பொருள் (Elements) களினாலேயே ஆக்கப்பட் டிருக்கின்றன வென்றும், இரண்டு வகை மின்னணுக் (Electrans) களி னாலேயே ஆகியிருக்கின்றன வென்றும் கூறுகின்றார்க ளல்லவா? எல்லாப் பொருள்களும், இந்தப் பூமியும், சூரிய சந்திரர்களும், நக்ஷத்திரங்களு மாகிய எல்லா அண்டங்களும், எல்லா மூலப் பொருள்களும், எல்லா மின்னணுக்களும் ஒரே ஒரு முதன் மூலப் பொருளி லிருந்துதான் உண்டாகி யிருக்கின்றன. அந்த முதன் மூலப் பொருளை எந்த விஞ்ஞானியினாலும் எவ்விதக்

கருவியினுலும் கண்டு பிடிக்க வியலாது. அதனுல் அம் முதன் மூலப் பொருளுக்கு "அவ்வியக்தம்" என்று பெயர். அதைக் கண்டுபிடிக்கலாமென்று ஆராய்கின்ற வர்களுக்கு எவ்விதத்திலும் புலப்படாமலே யிருந்து கொண்டு இவ்வெல்லாப் பிரபஞ்சத்தையும் விசித்திரம் விசித்திரமாக உண்டுபண்ணுவதால் அதற்கே "மாயை" என்று பெயர். அதுவே யாவற்றினுக்கும் ஆதி காரண வஸ்துவா யிருப்பதால் அதற்கே மூலப் பிரகிருதி யென்றும் பெயர். இந்த மூலப் பிரகிருதியையே தமிழில் இயற்கையென்று அறிந்தோர் கூறுவர். இந்தப் பிரகிருதி அறிவில்லாத ஜடப் பொருள். ஒரு செயலும் இல்லாதது. ஆயினும், ஒரு செயலும் இல்லாத இரும்பு ஊசியானது காந்தக் கல்லிற்கு முன்னே யிருந்தால் அசைந்து விரைவாக நகர்ந்து செல்வது போலும், பனிக்கட்டியானது சூரியன் முன்னே உருகித் தண்ணீ ராக ஓடுவது போன்றும் அறிவே வடிவாய இறைவ னின் சந்நிதானத்தில் இருப்பதால் எல்லாச் செயல்களை யும், எல்லாக் குணங்களையும் உடையதாகி இவ் வெல் லாப் பிரபஞ்சத்தையும் உண்டுபண்ணுகின்றது. அதா வது தானே எல்லாப் பொருள்களாகவும், நம் உடல், மனம் முதலியவைகளாகவுங்கூட ஆகின்றது.

கமலா:- அப்படியானுல், பிரகிருதி யல்லவோ எல்லாப் பொருள்களையும் படைக்கின்றது என்றும், எல்லாக் குணங்களையும், எல்லாச் செயல்களையும் உடையது என்றும் கூறவேண்டும். கடவுள்தான் இவற்றை யெல்லாம் செய்கின்றுர் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

விமலா:- அவசரப்படாதே கமலா! அதைச் சொல்வதற்குத்தானே வந்தேன். முன்பு கூடக் குறிப் பாகக் கூறியிருக்கின்றேன். கவனித்துக் கேள். கடவுள் கற்பக மரம் போன்றவர். கற்பக மரம் தனியாக ஒருவரு மில்லாம லிருந்தால் அது ஒன்றையும் உண்டுபண்ணுது. பூக்கள் பூக்காது. காய்கள் காய்க்காது. ஆனுல் ஒரு மனிதன் அதன் அருகில் வந்து எவ்வாறெல்லாம் நினைப்பானே அவ்வாறெல்லாம் உண்டாகும். அம் மரத்தின் சந்நிதான மகிமையால் அவன் கற்பனை யாகிய எண்ணங்க ளெல்லாம் உருவெடுத்து விடுகின் றன. அதனுலேயே அதற்குக் "கற்பக மரம்" என்று பெயர் வந்தது. கற்பக மரத்தின் சமீபத்திலில்லாமல் அவன் நினைப்பவை ஒன்றும் உண்டாவதில்லை. கற்பக மரமும் ஒன்றையும் உண்டுபண்ணுவதில்லை. அம் மரத் தின் அருகிலிருக்கும் போது அவன் நினைப்பவைக ளெல்லாம் உருவெடுத்து வந்துவிடுவதால், அவன் அக் கற்பக மரமேதான் நினைப்பவைகளை யெல்லாம் உண்டு பண்ணுகின்றது என்று எண்ணுகின்றுன்.

வெய்யிலில் வழி நடக்கும் ஒரு மனிதன் தூரத் தில் தெரியும் ஒரு மரத்தைப் பார்த்து அது நன்ருகப் பரந்து தளிர்த்துக் குளிர்ந்த நிழலைத் தரும் பெரிய மரமா யிருந்தால் அதன் அடியில் சற்று இளைப்பாறிச் செல்லலாம் என்று எண்ணிக் கொண்டே சென்றுன். அம்மரம் கற்பக மரமாகவிருந்ததால் அவன் அவ்விடம் வருவதற்கு முன் அது ஒரு பெரிய ஆல விருக்ஷத்தை விட விசாலமானதாய் அடர்ந்து தளிர்த்து நல்ல அழகிய நறுமணம் கமழும் பூக்களோடு கூடியதாய் மிகுந்த

நிழலைத் தந்துகொண்டிருந்தது. வழிப்போக்கன் அதன் அடியில் வந்து தங்கி அங்கு வீசும் இளந் தென்றலால் களை நீங்கி, இங்கு நல்ல பஞ்சணையோடு கூடிய கட்டி லிருந்தால் எவ்வளவு நன்று யிருக்கு மென்று நினைக்க வும், அவ்வாறே யிருந்தது. அதன் மேல் படுத்துக் கொண்டு, இம் மரத்திலே இப்போது உண்ணத் தகுந்த இனிய கனிகள் இருந்தால் பறித்து உண்டு பசியாற லாமே யென்று நினைத்து மேலே பார்த்தான். அப்பொ ழுதே பற்பல இனிமையான கனிகள் அம் மரத்தில் ஏராளமாய்ப் பழுத்திருந்தன. அவற்றைப் பார்த்த வுடன் இச் சமயத்திலே ருசிகரமான உணவு மட்டும் இருந்தால் அதனை உண்டு பின் இப்பழங்களைப் புசிக்க லாமே என்று எண்ணினான். அக்கணமே அறுசுவை உண்டியும் அவன் முன்னே வந்தது. அவற்றை யெல் லாம் மகிழ்வோடு வயிறு புடைக்கச் சாப்பிட்டான். ஆசைக்கோ ரள வில்லை யல்லவா? இச் சமயத்திலே அழகிய சில பெண்கள் கால் பிடித்து விட நிம்மதியாக மதுர கீதம் கேட்டுக்கொண் டிருந்தால் எவ்வளவு ஆனந்த கரமாக விருக்கும் என்று நினைத்தான். அவ் வண்ணமே நிகழ்ந்தது. அவன் மனது அத்துடன் நின்றுவிட வில்லை. இப்பொழுது நம்மை விடப் பாக்கி யசாலி யாருமில்லை. இன்ப சாகரத்திலே திளைத்துக் கொண்டிருக்கிறோமே. யாருமற்ற இவ்வருங் கானகத் தில் இப்பொழுது திடீரென்று ஏதாவது புலி வந்து விட்டால் நம் கதி என்ன ஆவது என்று எண்ணினான். தக்ஷணமே ஒரு புலி வந்து அவனைப் பிடித்துத் தின்று விட்டது. கமலா! இத் தகைய கற்பக மரத்தைப் பற்றி

யும் இக் கதையையும் நீ கேள்விப்பட் டிருக்கலாம். இக் கதையை நான் உண்மையாக நம்பச் சொல்ல வில்லை. கற்பக மரம் என்ற ஒரு மரம் இருக்கின்றதா என்ற ஆராய்ச்சியில் இறங்க வேண்டாம். ஆனால் இக் கதையினுள் பொதிந்திருக்கும் உண்மைக் கருத்தை மட்டும் உணர்ந்துகொள்.

வழிப் போக்கனுக்கு உண்டான இன்பங்களுக்கும், துன்பங்களுக்கும், அங்குண்டான பொருள்களுக்கும் கற்பக மரம் காரண மல்ல. அது ஒன்றையும் உண்டுபண்ண வில்லை. அவனுடைய எண்ணங்களே எல்லாவற்றிற்கும் காரணம், அவன் மனமே எல்லா உருவையும் எடுத்தது. ஆயினும் கற்பக மர மில்லா விட்டால் ஒன்றும் உண்டாகாது. ஆதலால் கற்பக மரமே எல்லாவற்றையும் உண்டுபண்ணுகின்றது என்றும், அம்மரத்திற்கு நினைத்தவற்றை யெல்லாம் உண்டு பண்ணும் குண மிருக்கின்றது என்றும் கூறப்படுகின்றதல்லவா? அஃதே போன்று ஜீவர்களின் எண்ணங்களுக்கும் பாவ புண்ணிய வினைகளுக்குந் தக்கபடி கடவுளின் சந்நிதான மகிமையினாலே பிரகிருதியே எல்லா வடிவையும் எடுக்கின்றது. கடவுள் ஒன்றையும் செய்யாவிட்டாலும், கடவுள் இல்லாவிடின் பிரகிருதிக்கு ஒன்றும் செய்ய இயலாது. ஆதலால் கடவுளே எல்லாவற்றையும் செய்கின்றார் என்று சொல்லப்படுகின்றது.

கடவுளின் சன்னிதான பலத்தினாலே பிரகிருதியானது எல்லாப் பொருள்களையும், அறத்தினை இயற்று

பவர்களுக்கு இன்பங்களையும், மறத்தினை யியற்றுபவர்களுக்குத் துன்பங்களையும் உண்டுபண்ணி, ஜீவர்களை வரவரச் செய்கையிலும் ஞானத்திலும் உயர்வடையச் செய்து கடைசியில் கடவுளின் தன்மையை அடையச் செய்கின்றது. இவை யெல்லாம் கடவுளின் மகிமையாலேயே உண்டாவதாலும், நன்மையும் தீமையுமாகிய வெல்லாம் முடிவில் மேன்மைக்கே அதாவது ஜீவர்கள் கடவுளாவதற்கே காரண மாகின்ற படியினுலும் கடவுள் அறக் கருணையும், மறக் கருணையு மாகிய குணங்களை யுடையவர் என்று சொல்லப்படுகின்ருர்.

அந்தக் கடவுளே உன் னுள்ளேயும், எல்லாச் சிவர்களுக்குள்ளேயும் இருப்பதனுலேதான், பிரகிருதியிலிருந்துண்டான மனமானது நன்மையும் தீமையுமான எல்லா எண்ணங்களையும் எண்ண முடிகின்றது. சூரியன் உதிப்பதனுல் இருள் நீங்கிவிடுகின்றது. தாமரை மலர் மலர்கின்றது. ஆம்பல் மலர் குவிகின்றது. நீங்கிவிடுவதும், மலர்வதும், குவிவதும்; இருள், தாமரை, ஆம்பல்களின் தன்மையே யல்லாமல் எல்லாவற்றிற்கும் பொதுவாய் ஒரே விதமாய் விளங்கும் சூரியனின் செய லல்ல. ஆயினும் சூரியனே இருளை ஓட்டுபவன் என்றும், தாமரையை மலர்விப்பவன் என்றும், ஆம்பலைக் குவியச் செய்பவன் என்றும் கூறுகின்ருர்களல்லவா? ஒரே தண்ணீரேதான் வேப்பமரம் வளர்ந்து கசப்பான காயைத் தருவதற்கும், புளியமரம் வளர்ந்து புளிப்பான காயைத் தருவதற்கும், தேமா மரம் வளர்ந்து இனிப்பான கனியைத் தருவதற்கும், மிளகாய்ச் செடி வளர்ந்து காரமான காயைத் தருவ

தற்கும் காரணமாகின்றது. அதனுல் கைப்பும், புளிப்பும், திதிப்பும், கார்ப்பும் உண்டாகின்ற குற்றம் தண்ணீரைச் சேர்ந்த தல்லவே. அது போன்றே மனத்திலுண்டாகும் நல்ல எண்ணங்களுக்கும் தீய எண்ணங்களுக்கும் கடவுள் காரண ரில்லா திருந்தும் காரணராவர். இதனுலேயே "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்றும் "எல்லாச் சீவரையும் சூத்திரப்பாவைபோல் ஆட்டி வைப்பவன் இறைவனே" என்றும் சொல்லப்படுகின்றது. ஆயினும் இறைவன் ஆசைகள், கோபங்கள், துன்பங்கள் முதலிய ஒன்றையும் படைக்கவில்லை யல்லவா?

கமலா:- அக்கா! அப்படியானுல் கடவுளின் சன்னிதான மகிமையினுல் பிரகிருதியே எல்லாப் பொருள்களாகவும் ஆகின்றது. கடவுள் ஒன்றும் செய்வ தில்லை. கடவுள் சன்னிதான பலத்தினுல் எல்லாம் உண்டாவதால் கடவுளே எல்லாவற்றையும் படைத்தார் என்று சொல்லப்படுகிறது என்பதற்கு ஏதாவது மேற்கோள் காட்ட முடியுமா?

விமலா:- ஆஹா! கமலா! உன்னைப் போல என்னையும் தான் தோன்றித்தனமாக நானுகவே ஏதேதோ உளறுகின்றேன் என்று நினைத்துக் கொண்டாயோ! ஒரு பொருளை நிச்சயம் செய்வதற்கு சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய மூன்றும் வேண்டு மென்பார்கள். அதாவது ஆன்ருேர்களால் தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய நூல்களைக் கற்று, அவற்றிலுள்ள பொருள்கள் நமது யுக்திக்கும் பொருத்தமா

யிருக்கின்றனவா யென ஆராய்ந்து அதன் பின் அவற்றைத் தாமே நேரே அனுபவித் துணர்ந்து நிச்சயம் செய்த பிறகுதான் அதைப் பிறருக்கு நாம் சொல்ல வேண்டும். அப்படி உறுதி செய்தவைகளைத் தான் நான் கூறுவேன். ஆதலால் சிறந்த மேற்கோள் கள் காண்பிக்கிறேன் பார்.

ஸ்ரீமத் பகவத் கீதை ஒன்பதாவது அத்தியாயம் பத்தாவது சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகரு கின்றார்:- "ஓ அருச்சுன! சூரியனைப் போலப் பிரகாச வடிவ பரமேசுவரனாகிய என்னால் பிரகாசிப்பிக்கப் பட்ட மாயா வடிவப் பிரகிருதியே இச் சராசரமான உலகைத் தோற்றுவிக்கின்றது. இவ்வாறு ஒன்றையும் செய்யாமல் பிரகிருதி தானே வேலை செய்யும்படி பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே யே இவ் வுலகம் பற்பல வகையான விகாரத்தை யடை கின்றது."

இன்னும் நான்காவது அத்தியாயம், பதின் மூன் றாவது சுலோகத்தில் "நான் அழிவற்ற பரமாத்மாவாகி யும் ஒரு செய்கையுமில்லாத அகர்த்தாவாகியும் இருந்த போதினும், என்னுடைய சந்நிதான மகிமையாலேயே பிரகிருதி எல்லாவற்றையும் செய்வதால் மனிதர்களு டைய குணங்களுக்கும் தொழில்களுக்கும் தகுந்தபடி வேறு வேறாக நான்கு வருணத் தன்மையும் என்னா லேயே சிருட்டிக்கப்பட்டது என்றும், அதற்கு நான் கர்த்தாவாக விருக்கின்றே னென்றும் அறிவாயாக!" என்று இயம்புகின்றார்.

கமலா:- சரி விமலா அக்கா! "கடவுள் தன்னை வணங்குகிறவர்களுக்கும் தன்னை நிந்திக்கின்றவர்களுக்கும் நன்மையோ தீமையோ ஒன்றும் செய்வதில்லை. விருப்பும் வெறுப்பும் கொள்கின்றதில்லை. அவரவர் எண்ணத்திற்கும் புண்ணிய பாவ கர்மங்களுக்கும் தக்கபடி கடவுளின் சந்நிதியில் அவரவர்களே நன்மையையுந் தீமையையும், பிரகிருதியினுல் அடைகின்றுர்கள்" என்பதற்கும் தக்க மேற்கோள் காட்ட முடியுமா?

விமலா:- அப்படிக்கேள் கமலா! உயர்ந்த சாஸ்திரங்களின் மேற்கோள்களில் உனக்கு விசுவாசம் வந்துவிட்டால் அதன் பிறகு நீ கட்டாயம் உயர் நிலையை யடைவாய். ஞான வாசிட்டத்தில், லீலை கதையில் எழுபத்தாறுவது செய்யுளில் கலை வாணியாகிய தேவி லீலை யென்னும் ஞான அரசியைப் பார்த்துக் கூறுகின்றுள்:-

"ஒருவ ருக்குநா மொன்று நல்கலம்
உணர்வின் வண்ணமே உயிர்க ளெய்துமால்
கருதி முந்திநீ கதிவி ரும்பினுய்
காத லித்தசிற் கண்ண ளித்தனம்
பெருகு காதலா லிந்த வண்ணமிப்
பேதை வேண்டவிப் பேறு நல்கினம்
இருத யத்திலே நினைந்த தெய்திடும்
எமது பார்வையா லியார்க்கு மென்றனள்"

தெரிகின்றதா கமலா! இன்னும் கிருஷ்ண பகவான் கீதையில் ஒன்பதாவது அத்தியாயம் இருபத்தோன்பதாவது சுலோகத்தில்:-

"ஏ அருச்சுனு! பரமேசுவரனுகிய நான் எல்லாப் பிராணிக ளிடத்திலும் சமமானவ னுகவே யிருக்கின்றேன். எனக்கு வெறுப்பானவன் ஒருவனு மில்லே. பிரியமானவனும் ஒருவனுமில்லே. ஆனுல் எவர்கள் என்னேப் பக்தியோடு சேவிக்கின்ருர்களோ அவர்க ளென்னிடத்தி லிருக்கின்ருர்கள். நானும் அவர்களிடத்தி லிருக்கின்றேன்." என்று கூறுகின்ருர். அது எப்படி யென்ருல்:-

சூரியன் எதனிடத்திலும் விருப்பு வெறுப்பில் லாமல் எங்கும் ஒரே விதமாக வெய்யிலேக் கொடுக் கின்ருன். அந்தச் சூரிய ஒளியால் தண்ணீரி லிருக்கும் தாமரை நன்ருகத் தளிர்த்து வளருகின்றது. மலர் நன்ருக அலர்கின்றது. கரையில் பறித்து எறியப்பட் டுள்ள தாமரை காய்ந்துவிடுகின்றது. அல்லிமலர் குவிந்துவிடுகின்றது. அதுபோல விருப்பு வெறுப்பில் லாத கடவுள் முன்னிலேயில் புண்ணியம் செய்தவர்கள் இன்ப மடைகின்றனர். பாபம் செய்தவர்கள் துன்ப மடைகின்றனர்.

ஒருவரிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நடு நிலேமையோடு செங்கோ லோச்சும் அரசன் தன்னேச் சேர்ந்தவர்க ளிடத்தும் அந்நியர்க ளிடத்தும் பக்ஷபாத மின்றி ஒரே தன்மையனுகவே யிருக்கின்ருன், வலிமை யின்றி எளியவனுக விருக்கும் ஒரு மனிதன் அரசனேச் சாராம லிருக்கும்போது வலிமையுடைய துஷ்டர் களால் துன்புறுத்தப்படுகின்ருன். அதனேத் தவிர்த்துக் கொள்ள அவனுல் முடியவில்லே. தனக்குப் பிரியமான

நண்பர்களுக்கு யாதோர் ருதவியும் செய்ய முடிவதில்லை. அந்த எளியவனே அரச சேவகனுக அமர்ந்துவிட்ட பிறகு வலிமையுடைய துஷ்டர்களுக்கும் அவனே ஒன்றும் செய்ய இயலுவதில்லை. மாருகத் துஷ்டர்களை அவன் அடக்குகின்ருன். தனது பிரியமான நண்பர்களுக்குப் பலவிதமான உதவிகளையும் செய்கின்ருன். ஆனுல், அரசன் அவனுக்கு ஒன்றும் செய்வதில்லை. அவன் சமீபத்திலும் இருப்பதில்லை. ஆயினும், உலகத்தார் அவ் வெளியவனை, அவன் அரசனிடத்தி லிருக்கின்ரு னென்றும், அரசன் அவனுக்கு உதவியாக விருக்கின்ரு னென்றும் கூறுகின்ருர்கள். பகவான் கீதையில் பகர்ந்ததும் இக் கருத்தேயல்லவா? உன்னுடைய ஐயங்களெல்லாம் அகன்றனவா கமலா?

கமலா:- அது சரி யக்கா! இன்னுமுள்ள என் ஐயங்களை யெல்லாம் அகற்ற வேண்டும். அதன் பிறகல்லவா நான் உங்கள் கொள்கையைக் கொள்ள முடியும்.

விமலா:- இன்னும் உன் ஐயங்கள் நீங்கவில்லையா? நம்பிக்கை உண்டாக வில்லையா? சரி கேள். உன் சந்தேகங்க ளெல்லாம் ஒழியும்படி தக்க பதில் கூறுகின்றேன்.

கமலா:- நீங்கள் இதுவரை கூறியபடி கடவுள் ஒரு குணமு மில்லாதவர். ஒரு செயலு மில்லாதவர். அவர் ஒருவருக்கும் ஒன்றும் செய்வதில்லை. அப்படியிருக்க, கருணை முதலிய நற்குணங்க ளெல்லாம் அவரி

டத்தி லிருக்கின்றன வென்றும் நன்மை யெல்லாம் அவரே செய்கின்ருர் என்றும் சொல்வதும், பக்தர்கள் அவரை வழிபாடு செய்வதும், எதற்காக?

விமலா:- கமலா! நான் இதற்கு முன் கூறிய பதில்களை யெல்லாம் நன்ருகக் கவனித்திருப்பாயே யானுல் இந்த ஐயம் உனக்கு எழாது. பதிலும் தெரிந்திருப்பாய். உனக்கு எப்படியாவது என்னைக் கேள்விகள் கேட்டு மடக்க வேண்டு மென்னும் எண்ணமே யிருக்கின்றது. ஆதலால் நன்ருகக் கவனித்து ஆய்ந்து பார்க்க வில்லை. ஆயினும் இன்னும் நன்ருகச் சொல்லுகிறேன்; இனியாவது மனதைக் கோண லாக்காமல் நேராக வைத்துக்கொண்டு கேள். சொல்கின்றேன்:-

மனமே மனிதன். மனிதன் மனமே. மனத்தின் தன்மை எத்தகையதோ அதுவே மனிதன் தன்மை. நல்ல, உயர்ந்த எண்ணங்களை யுடையவன் நல்ல உயர்ந்த மனிதன். திருட்டு எண்ணங்களை யுடையவன் திருடன். ஆகவே மனத்தை உயர்ந்த எண்ணங்களுடைய தாக்கினுல் மனிதன் உயர்ந்தவ னுகின்ருன். மனிதன் எந்த எண்ணங்களை அடிக்கடி எண்ணிப் பழகி வருகின்ருனே அவ்விதமானவ னுகவே அவன் ஆகிவிடுகின்ருன். நோயின்றி ஆரோக்கியமாய் இருக்கும் ஓர் மனிதன் நோயாளிகளுடன் அடிக்கடி பழகுவதால் நோய் எண்ணங்கள் அவனுக்கு உண்டாகித் தனக்கு உள்ளேயே சிறிது சிறிது நோய் அடங்கி யிருக்கின்றதோ பின் அதிகரித்து வெளிப்படுமோ என்று ஐயங்கொள்ள ஆரம்பித்து அடிக்கடி நோயையே

எண்ணிக்கொண் டிருப்பானேயானல் அவன் விரைவில் நோயாளி யாகவே ஆகி விடுவான். நோயுடைய ஒருவன் தனக்கு நோயில்லை யென்று திண்ணமாக எண்ணி வருவானே யாயின் நோயற்றவ னகவே ஆகி விடுவான். அப்படியே நல்லோர்களுடன் பழகப் பழக அவர்களின் நற்குணங்களையே எண்ணி எண்ணி அவனும் உயர்ந்த நல்லோனகி விடுகின்ருன். அவ்வாறே தீயோருடன் பழகுவதால் தீய எண்ணங் களை எண்ணி எண்ணித் தீயோனகி விடுகின்ருன். மனம் எண்ணுகின்றபடியே மனிதன் ஆகி விடுகின்ருன். இது மனே தத்துவ நூலோரின் துணிபு. இதுபற்றியே நம் அவ்வைப் பிராட்டியாரும்:-

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றேயாம்; — நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே; யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று." என்றும்

"தீயாரைக் காண்பதுவுந் தீதே; திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதேயாம்; — தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே; யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது." என்றும் பாடியுள்ளார்.

ஒருவன் தூங்கும்போது என்ன எண்ணத் துடன் தூங்குகின்ருனே அதே எண்ணத்துடன் எழுந் திருக்கின்ருன். அதே போன்று ஒருவன் இறக்குந் தறுவாயில் என்ன எண்ணத்துடன் இறக்கின்ருனே அந்த எண்ணத்தின்படியே அடுத்த பிறவியை எடுக் கின்ருன். இறக்கும்போது உண்டாகும் எண்ணம்,

அவன் முன்பே பழகியுள்ள எண்ணங்களுக்குத் தக்க வாறும் செய்துள்ள புண்ணியத்திற்குத் தக்கவாறுமே யுண்டாகின்றது. மனத்தில் தோன்றும் எண்ணங் களுக்கு இவ்வளவு வன்மை யுண்டு. பழக்கத்திற்குத் தக்கபடியே எண்ணங்கள் திண்மை யுறுகின்றன. இது பற்றியே தெய்வத் திருவள்ளுவரும்:-

"எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." என்று கூறுகின்றார்.

எனவே, நாம் நன்மைகளை யடைய வேண்டு மாயின் கடவுளிடத்தில் எல்லா உயர் குணங்களும் இருக்கின்றன வென்றும், அவர் கருணையே வடிவ மானவர் என்றும், அவர் பக்தர்களுக்கு எல்லா நன்மை களையும் அருள் செய்வார் என்றும் திண்ணமாக எண்ண வேண்டும். நல்லனவும் தீயனவு மாகிய எல்லா உலகப் பொருள்களும், நமக் குண்டாகின்ற இன்பங்களும் துன்பங்களும் ஆகிய வெல்லாம் அவருடைய பிரகாசத் தினலேயே பிரகிருதியில் உண்டாகின்றன அல்லவா? நமக்குத் தீயவைகளும், துன்பங்களும் வேண்டிய தில்லையே. ஆதலால் கடவுள் நமக்குத் தீயவைகளை யும் செய்யார்; துன்பங்களையும் உண்டு பண்ணர்; நன்மைகளையே செய்வார். துன்பம் உண்டாயினும் நாம் செய்த பாவங்களை விரைவில் போக்கி நன்மையை அருளுவதற்காகவே செய்கின்றார். என்று திண்ணமாக எண்ண வேண்டும். அப்படி எண்ணுவதாலும் கடவுள் வழிபாடு செய்வதாலும் கற்பக விருக்ஷத்தின் அடியில் இருந்து கொண்டு இது நமக்கு நல்லன வெல்லாம்

தரும் என்று எண்ணினுல் நல்லன வெல்லாம் உண்டா வது போல, அவருடைய ஒளி, நமக்கு இன்பங்களையே யுண்டு பண்ணும் அருளொளியாகவே ஆகும். இவ்வாறு மிகுதியான கடவுள் வழிபாட்டினுலேதான், நமது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருவாரூரர், திருவாதவூரர் முதலியோர் இறந்தோரை எழுப்புதல் முதலிய செயற்கருஞ் செய்கைகளை யெல்லாம் செய்ய வல்லவர்க ளானுர்கள். இவ்வாறு கடவுள் ஒரு செய்கையுஞ் செய்யாதவராயும், ஒரு குணமு மில்லாதவ ராயும் இருந்தாலும், கடவுளிடத்தில் பக்தர்களுக் கருள் செய்தல் முதலிய எல்லா நற்குணங்களும் இருக்கின் றன வென்று நம்பி பக்தியோடு கடவுள் வழிபாடு செய்வதனுல் எல்லா நன்மைகளையு மடையலாம். அதிகமாகக் கூறுவானேன். சிறந்த பக்தர்கள் கடவுளைத் தியானித்துத் தியானித்துக் கடைசியில் கடவுளாகவே ஆகிவிடுகின்றுர்கள்.

இவ்விதம் மக்களாய்ப் பிறந்தோர் கடவுள் வழி பாட்டினுல் எல்லா நன்மையையும் அடைய முடிவதாய் இருக்க, அறிவுடைய மக்களாய்ப் பிறந்தும் கடவுள் வழிபாடு செய்து நன்மையை அடையா திருத்தல் அவர்களின் குற்றமே யன்றே! நல்ல உணவு இருக்கும் போது அதைச் சாப்பிடாமல் பசியால் வருந்துவதும், நல்ல தண்ணீர் இருக்கும்போது பருகிக் கொள்ளாமல் நீர் வேட்கையுட னிருப்பதும், குளிர்ந்த மர நிழலிருக் கும்போது களைப்பாருமல் வெய்யிலால் துன்புறுவதும் அவரவர் குற்றமே யல்லவா? இக் கருத்தைப் பட்டினத்துப் பிள்ளையாரும் திருவிடைமருதூர் மும் மணிக் கோவையிலே:-

பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண !
நின்னது குற்ற முளதோ ? நின்னினைந்
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை களைந்து,
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா,
இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை யடிசில் அட்டினி திருப்ப
புசியா ஒருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்ற மன்று; வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்று; கண்ணகன்று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்ந் திடுவா னொருவன்
நெடிது வருந்துதல் நிழற்றீங் கன்றே." எனக் கூறுகின்றார்.

நீ நீதி நூல்களை நன்கு ஆராய்ந்து படித்திருப்பாயேயானால் உன்னுடை சந்தேகங்களின் பதிலை அந் நீதி நூல்களிலேயே அறிந்திருப்பாய். அழிவில்லாத கடவுள் பதந்தன்னை அகமுகத்தவர் சேர்வர். வழி நடப்பவர் பராமுக மாயினால் மலர்ந்த கண்ணிருந் தாலும் குழியில் விழ்வர். அப்படி வெளிமுகங் கொண்டு

காமிக ளானோர் பழிதரும் பிறவிக்கட லழுந்துவர்.
பரகதி யடையார்.

எனவே நீ இனி முயற்சி செய்து, இறைவன் அருளால், மக்கள் உய்யும்படி தோன்றியுள்ள நூல் களின் சாரத்தை யறிந்து, நல்லோர் வழி சார்ந்து, தீ நெறியிற் சார்ந்தாரினின்றும் விலகி, உனது விவேகத் தால் மெய்ப் பொருள் பொய்ப் பொருள்களை யறிந்து பிறவிநோயென்னும் பெரு நோயை யகற்றிக் கொள்ள வேண்டும்.

கமலா:- அக்கா! நாம் எப்பொழுதாவது நேரே கண்டறிந்த பொருள்களைத் தானே உறுதியாக உண்டென்று நம்புகிறோம். ஆகாயத்தில் அம்மி பறக் கிறது என்றால் நம்புவோமா? நாம் நேரே பார்க்கா விட்டாலும், உலகில் பலபேர் கண்டறிந்து அப் பொருள்களால் நன்மையோ தீமையோ உண்டாகி, எல்லோருக்கும் பிரசித்தமாக வுள்ளவற்றைத் தானே நம்ப முடியும். கடவுளை அப்படி எப்பொழுதாவது நானும் கண்டதில்லை. அல்லது உலகில் அநேகம் பேர் கள் நாங்கள் கண்டு அவரிடத்தி லிருந்து இன்னதைப் பெற்றோம் என்று சொல்லவுங் காணோமே. அப்படி யிருக்க ஒருவருக்கும் புலன்களுக்குப் புலப்படாத அவரை எப்படி உண்டென்று நம்புவது?

விமலா:- நன்று சொன்னாய் கமலா! கண் களுக்கு நிறமுடைய பொருள்கள்தான் தெரியும். ஒரு நிறமு மற்றதாகிய காற்று கண்களுக்குப் புலப்படாத தால் இல்லை யென்று சொல்லலாமா? காற்று பரிச

முடைய பொருள். பரிசத்தை நாம் உடம்பினுல் அறிகிறோம். ஆதலால் காற்றையும் நாம் உடம்பினுல் உணர முடிகின்றது. அப்படிப் பரிசமு மின்றிய பொருளை நாம் பொறிகளால் அறிய முடியாததால் இல்லை யென்று சொல்லி விடலாமா? ஆகாயம் (Eather) நம்மைச் சுற்றி எவ் விடத்திலும் நம் உடம்பிற்குள்ளே யுங்கூட நிறைந்திருக்கிறது. அது புலப்படாததால் இல்லை யென்று சொல்பவன் அறிவீன னல்லவா? நம் காது ஒலியை மட்டும் அறியும். மூக்கு மணத்தை மட்டு மறியும். நாக்கு சுவையை மட்டு மறியும். எனவே செவி, மெய், விழி, நா, மூக்கு என்னும் ஐம் பொறி களாலும் ஓசை, ஊறு, நிறம், சுவை, நாற்றம் என்ற ஐந்து புலன்களைத்தான் அறிய முடியும். மனத்தி லுண்டாகும் விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, வாட்டம், துன்பம், வெளியின்பம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை ஐம் பொறிகளுள் எந்தப் பொறியினுலாவது அறிய முடியுமா? அப்படிப் பொறிகளால் அறிய முடியாததால் அவை யில்லை யெனக் கூறலாமா? புத்தி யினுலேதான் மனத்தி லுண்டாகும் விருப்பு, வெறுப்பு முதலியவைகளையும் எண்ணங்களே வடிவமான மனத் தையும் அறிய வியலும். கடவுள் ஓசை, ஊறு, நிறம், சுவை, மணம், ஆகியவை யில்லாதவர். ஆதலால் அவரை ஐம் பொறிகளாலும் அறிய முடியாது. விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, வாட்டம், துன்பம், புலன்களா லுண்டாகும் இன்பம் முதலிய ஒரு குணங்களு மில்லாதபடியால் எல்லோருக்கும் சாதாரணமாக வுள்ள வெளிமுகமான புத்தியாலும் அவரை அறிய

முடியாது. ஆகையினாலேதான் அவரைப் பலராலும் எளிதாக அறிய இயல வில்லை. ஆனால் ஞானிகள் அவரை அறிந்தே யிருக்கின்றார்கள். மனத்தைச் சலன மில்லாமல் ஒடுக்கி, புத்தியை உள் முகமாகத் திருப்பி னால் அந்தமில்லாப் பேரின்பமே வடிவமாக இறைவன் அறியப்படுவார். அவ்வண்ணம் அவரை அறிந்தவர் களே ஞானிகள் என்று சொல்லப்படுவர். இத் தகைய ஞானிகள் இனிப் பிறவா நெறியாகிய முக்தியை யடைந்து, கடவுளோடு கடவுளாக, வேறில்லாதபடி ஒன்றும் தன்மையை யடைவார்கள். இந் நிலையையே கைவல்ய முக்தி என்பார்கள். கமலா! இந் நிலையை யடைகின்றவர்கள் உலகில் மிகச் சொற்ப மானவரே யிருப்பார்கள். நீ கூட இடைவிடாமல் நன்னெறியில் முயன்று மனத்தை அலைவின்றி ஒடுக்கிப் புத்தியை உண்முகமாகத் திருப்புவா யானால் இறைவனை நேரே உணரக் கூடும். குருடர்கள் செம்மை, பசுமை, பொன்மை முதலிய நிறங்களை அறியாததுபோல மற்ற வெளிமுக நாட்டம் உடையவர்கள் கடவுளை அறியார் கள். இந்தக் கேள்வியையே நீ சென்ற தடவையிலும் முதலில் கேட்டாய், அப்பொழுதும் பதில் கூறினேன். இன்னும் ஐயம் உளதேல் கேள்.

கமலா:- அக்கா! நான்கூடக் கடவுளை யறியக் கூடும் என்று நீங்கள் உறுதியாகச் சொல்வதால் நீங்கள் இறைவனை உணர்ந்தே யிருக்கின்றீர்கள் என்று நம்புகின்றேன். அவ்வாறு கடவுளை நேரே கண்ட தாங்கள் திருஞானசம்பந்தர் முதலியவர்களைப் போன்று இறந்தவர்களை எழுப்புதல் முதலிய சித்திகளை

ஏன் அடையவில்லை? மேலும் சில பக்தர்கள் கடவுளைச் சிவன், விஷ்ணு, ராமர், கிருஷ்ணர், காளி, சரஸ்வதி, முருகர், கணபதி முதலிய பெயர்களோடும் உருவத் தோடும் தரிசித்ததாகச் சொல்கின்றார்களே உருவ மில்லாத அவருக்கு உருவங்கள் வந்த தெப்படி?

விமலா:- கடவுள் உருவங்களும், குணங் களும், செயல்களும் இல்லாதவ ராயினும் நாம் மிகுந்த தவம் இயற்றுவோமே யானால் அவர் மாயாப் பிர கிருதியையே தம் உடம்பாகச் செய்துகொண்டு பக்தர் கள் விரும்பும் குணங்களும், உருவங்களும், செயல் களும், உடையவராகத் தோன்றி வேண்டிய வரங்களை யீவார். தவம் இயற்றுவோருக்கு இறைவன் மாயை யால் ராமர், கிருஷ்ணர், முதலிய புத்திரராகவும் அவதரிக்கின்றார். ஆயினும் இவ் வுருவங்கள் கடவுளின் உண்மை வடிவமாக வில்லாமல் மாயா வடிவமாக விருப்பதாலும், அவர்களிட மிருந்து பெறும் வரங்கள் சிலகால மிருந்து அழிந்து போவனவா யிருப்பதாலும், கடவுளின் உண்மையான வடிவத்தை யுணர்ந்து அழிவற்ற கைவல்ய மோக்ஷத்தை அடையக்கூடிய ஞானிகள் பெரும்பாலும் அத்தகைய தவத்தைச் செய்ய விரும்புவதில்லை. மிகுந்த தவம் இயற்றும் பக்தர்கள் அத்தகைய மூர்த்திகளைத் தரிசித்து வரங் களையும் பெற்றிருக்கின்றனர். சித்திகள் அடைவ தென்பது அநேக ஜன்மங்களில் செய்த அளவற்ற தவத்தினாலேயே உண்டாகும். மிகுந்த பிரயாசைப் பட்டு அழிவுடையனவாகிய சித்திகளை யடைவதைவிட குறைந்த பிரயாசையால் அழிவற்ற பேரின்ப வீட்டைப் பெறுதலே சிறந்த தல்லவா? வசிஷ்டர், வேதவியாசர்

போன்றவர்கள் பூர்வ ஜன்மங்களில் நிஷ்காமிய மாக வும், காமியமாகவும் செய்த அளவற்ற தவத்தினுலே ஞானிகளாகவும், மிகுந்த சித்திகளை யுடையவ ராகவும் இருந்திருக்கின்றனர்.

கடவுள் உருவ மில்லாதவ ராயினும் பிரகிருதி யினுல் உடம்பை உண்டுபண்ணிக் கொண்டு உருவ முடையவ ராகக் காணப்படுகின்ருர் என்பதற்கு உதாரணம்:- ஸ்ரீமத் பகவத்கீதை நான்காம் அத்தியாயம் ஆருவது சுலோகம்:—

"எல்லாப் பிராணிகளுக்கும் ஈசுவரனுயும் அழிவற்றவனுயும் இருக்கும் நான் பிறப்பற்றவனுயினும் என்னுடைய பிரகிருதியை உடம்பாகச் செய்து கொண்டு என்னுடைய மாயையினுல் பிறக்கின்றேன்." என்று சொல்லப்பட்டுள்ளது.

கமலா:- அக்கா! நான் முன்பு ஆத்திரத்தில் கூறியவை அனைத்தும் தவறு. மன்னித்து விடுங்கள். என்னுடைய ஐயங்களெல்லாம் அகன்றன. நான் முன்பு வந்திருந்த பொழுது எல்லாவற்றிலும் பரிபூரண ராகிய கடவுளுக்கு உலகைப் படைக்க வேண்டுமென்ற ஆசை ஏன் எழும்ப வேண்டும்? என்று கேட்ட கேள்விக்குக் கூட இப்போதுதான் தக்க பதில் தெரிந்தது. அவரிடம் ஆசையுமில்லை. அவர் உலகைப் படைக்கவும் இல்லை. அவர் சந்நிதியில் இயற்கை இவ்வாறெல்லாம் ஆகியிருக்கின்றது என்று தெரிந்து கொண்டேன். உண்மையாக நம்முடைய இந்து மதத்தில் எத்தனையோ அரிய கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன என்ற உண்மையை நன்கு அறிந்து கொண்டேன். அமிழ்தக் கடல் போன்று பரவிக்

கிடக்கும் உண்மைத் தத்துவத்தை அள்ளிப் பருகுவதற்குத்தான் ஆளில்லை போலும். இனி நான் இவ் வழியிலே மேன்மேலும் செல்லுவேன் என்பது உறுதி. இத்தனை காலமாக இதனை யுணராது என் வாழ்நாளை வீணாக்கிவிட்டேனே. இனியேனும் நான் மெய்யுணர்வு பெற இறைவன் அருள் புரிவானாக! அக்கா ஒன்று மறந்து விட்டேன். சென்ற முறை கடைசியில் "சோதியா துனக்கு" என்று ஒரு பாட்டுச் சொன்னீர்களே, அதன் கருத்தை நான் அனுபவமாக உணரும்படி செய்வீர்களா ?

விமலா;- கமலா! இப்போது நீ நல்வழிக்கு வந்துவிட்டாய் என்று மிகவும் மகிழ்கின்றேன். ஆயினும் இப்போது இந் நிலையில் உனக்கு அப் பாட்டின் கருத்துக்களைக் கூறினாலும் நீ அதை அனுபவமாக உணர்ந்து கொள்ளுதல் அரிது. உனக்கு ஞானம் உண்டாக வேண்டுமானால் முதலில் ஞானசொரூபியும் வாக்தேவியுமான சரஸ்வதியை உபாசனை செய். உன் மனந் தெளிந்த பிறகு பின் அப்பாட்டின் கருத்தை உனக்கு விளக்குகின்றேன்.

கமலா:- விமலா அக்கா! இப்பொழுது நேரமாகிறது. நான் போய் வருகின்றேன். இன்னொரு முறை உங்களிடம் வந்து சரஸ்வதிதேவியின் தத்துவத்தையும், அதற்குரிய மந்திரத்தையும், அவரை வழிபடும் முறையையும் தெரிந்துகொண்டு அவ்வாறே உபாசனை செய்கின்றேன். வணக்கம். என்னை ஆசிர்வதியுங்கள். வணக்கம்.

விமலா:— கலைவாணி நல்லருள் புரிவாராக!

இந் நூலாசிரியரால் எழுதப்பெற்ற
"யோக வாசிட்ட ஞானப் பெண்மணிகள்"
என்னும் நூலுக்கு **"ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்"**
(1952 ஹூ) நந்தனஹூ ஆடிமீ இதழில்
வெளியிடப்பட்டுள்ள

மதிப்புரை.

"யோகவாசிட்ட ஞானப் பெண்மணிகள்."

ஆசிரியர்:- ஞானசௌந்தரி அம்மையார்.
பக்கம்: 138. விலை: ரூ. 1—4—0
கிடைக்குமிடம்:- சிவானந்த சாதன நிலையம்.
திருஈங்கோய்மலை. முசிரி Taluk, திருச்சிராப்பள்ளி Dt.

அத்வைத ஞானத்தைக் கதைவாயிலாக எளிதிற் புகட்டும் யோக வாசிட்டம் என்னும் நூலிலுள்ள கற்கடி, லீலை, சூடாலை ஆகிய மூன்று ஞானப் பெண் மணிகளின் கதைகளை இந் நூல் கூறுகின்றது. கதைச் சுருக்கப் பாடலும் கதையின் ஞானப் பொருளும், கதைகள் கீதையின் விரிவுரையாகும் வகையும் தரப் பட்டுள்ளன. நூலாசிரியரின் குருவும், பரம குருவும் அளித்துள்ள பொருள் பொதிந்த முகவுரைகள் நூன் முகப்பிலே மிளிர்கின்றன.

கதைகள் மிக அழகாக வருணனைகளோடும், சுவையோடும் கற்போரது உள்ளத்தைக் கவரும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியரின் செய்யுள் இயற்றும் திறன் பாடல்களிலும், கதைப் பகுதிகளின் தலைப்புகளிலும் புலனுகின்றது. தமிழ் உரை நடை உயர்வும், நயமும், தெளிவும், பொருட் செறிவும் அமைந்துள்ளது. பலரும் படித்து இன்ப முற்றுப் பயனடையும் முறையில் செவ்விதாக வரையப்பட் டுள்ள இந்நூல் ஆசிரியரது வேதாந்த அறிவிற்கும், ஞானச் சார்பிற்கும், தமிழ்ப் புலமைக்கும் சான்ருகத் திகழுகின்றது. இந் நூலை இருபாலாரும் கற்று விழுமிய ஞானப் பேற்றை அடைய விழைந்து முயலுவாராக.

நூல் அழகாக நன்கு அச்சிடப் பட்டுள்ளது.

இந் நூலாசிரியரின் குரு ஸ்ரீ ஸ்வாமி அத்வயானந்த ஸரஸ்வதி யவர்களால் இயற்றப் பெற்ற

சிவானந்த சாதன நிலைய வெளியீடு மலர்கள்.

	ரூ.	அ.	பை
பிரணவ தீபம் (ஓம் - மந்திரார்த்தங்களும், உபாசிக்கும் முறையும் அடங்கியது)	0	6	0
ஸ்ரீ அஷ்டாக்ஷர தீபம் (ஓம் நமோ நாராயணாய மந்திரார்த்தங்களும் உபாசிக்கும் முறையும் அடங்கியது)	0	2	6
ஈங்கோய்மலை க்ஷேத்திரம் புராணச் சுருக்கமும் தத்துவார்த்தமும்	0	4	6
கீதாசாரத் தாலாட்டு (வரலாற்றுடன்)	0	4	0
முருகதத்துவம்	0	4	0
பிரசினோத்தரி பகவத்கீதை பதவுரையுடன்			
ஷை முதல் அத்தியாயம்	0	4	0
ஷை இரண்டாவது அத்தியாயம்	0	6	0
ஷை மூன்றாவது அத்தியாயம்	0	4	0
ஷை பன்னிரண்டாவது அத்தியாயம்	0	2	6
ஷை பதினைந்தாவது அத்தியாயம் (விளக்கவுரையுடன்)	0	5	0
அருளுரைகள் (by சுவாமி சிவானந்தா)	0	2	0
தூயசிந்தைக் களஞ்சியம் ஷை	0	2	0
ஞானப் பெண் மணிகள் (by ஞானசௌந்தரி அம்மையார்)	1	4	0
கடவுள் ஒருவர் உண்டா? (by ஞானசௌந்தரி அம்மையார்)	0	8	0

தபால் கட்டணம் பிரத்தியேகம்.

கிடைக்குமிடம்;

சிவானந்த சாதன நிலையம்,

திரு ஈங்கோய் மலை.

முசிரி தாலுக்கா, திருச்சிராப்பள்ளி ஜில்லா.

கோவிலூர் ஆதீனம்
30307

இப் புத்தகத்தை

உயர்ந்த முறையில் அச்சிட்டு உதவிய

சிவகாசி "நாடார் பிரஸ் லிமிட்டெட்" அச்சகத்தாருக்கு

இறைவியின் அருள் நிறைவதாக !